பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 21 புதன்கிழமை (04-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:70

இன்று சுதந்திரதினக் கொண்டாட்டங்கள்

ஜனாதிபதி காலை 9.31 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்

இலங்கையின் 56ஆவது சுதந்திர தினப் பிரதான கொண்டாட்டம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இன்று காலை நடைபெறும்.

காலை 8.42 மணிக்கு உள் நாட்டு, மாகாண சபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார, மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரிய, சுற்றாடல், இயற்கை வள அமைச்சர் ருக்மன் சேனநாயக்க ஆகியோர் தேசப் பிதா டி.எஸ். சேனநாயக்கவின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்துவர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காலை 9.31 மணிக்கு சுதந்திர சதுக்கத்திலிருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.

நண்பகல் 12 மணிக்கு கடற்படையினர் 25 மரியாதைப் பீரங்கி வேட்டுக்களைத் தீர்ப்பதன் மூலம் பிரதான கொண்டாட்டம் முடிவுறும்.

சுதந்திர தினத்தை00த முன்னிட்டு சமய நிகழ்ச்சிகள் இன்று காலை 6.30 மணிக்கு கொள்ளுப்பிட்டி, பொல்

(16ஆம் பக்கம் பார்க்க)

இன்று துக்கதினம் அனுஷ்டிக்க குடாநாட்டில் முழு அளவில் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.4

இலங்கையின் சுதந்திரதினமான இன்று கரிநாள் அனுஷ்டிக்க குடாநாட்டில் பொது அமைப்புகள் விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. அத்துடன், மக்களின் உரிமைகளை வலியுறுத்திப் போராட்டங்களும் இடம் பெறவுள்ளன.

இன்று கடைகள், பிரதான வீதிகள், பொதுக் கட்டடங்களில் கறுப்புக் கொடிகளைக் கட்டுமாறும், பொதுமக்கள் கறுப்புப்பட்டிகளை அணியுமாறும் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

திரையரங்குகள் மற்றும் மினிசினிமாக்கள் இன்று மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் இன்று மினிபஸ்கள் உட்பட பொதுப் போக்குவரத்து வாகனங்கள் சேவையில் ஈடுபடமாட்டா என்று சம்பந்தப்பட்ட சங்கங்கள் மற்றும் சமாசங்கள் அறிவித்துள்ளன. கடற்றொழிலாளர்களை இன்று கடலுக்குச்செல்ல வேண்டாம் என்று யாழ்மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம் கேட்டுள்ளது. பொதுச்சந்தைகள், கடலுணவுகள் மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்கள் போன்றன இன்று செயற்படமாட்டா என்று தெரிவிக்கப்பட்டது.

உண்ணாவிரதங்கள்

தம்மை மீளக்குடியமர அனுமதிக்கும்படி வலியுறுத்தி வலி.வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்று காலை முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றார்கள். இந்தப் போராட்டத்துக்கான பிரசார நடவடிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

நாளை நாடாளுமன்றம் கலைப்பு; தவறினால் சனிக்கிழமை நடக்கும்!

மாகாணசபைகள் திருத்தச்சட்டம், தெரிவுக்குழு விசாரணை இவற்றை வைத்தே நாள் நிர்ணயிக்கப்பட இருக்கிறது

கொழும்பு,பெப்ரவரி4

இன்று சுதந்திரதினம் முடிந்ததும் - அநேகமாக நாளை அல்லது எதிர்வரும் சனிக்கிழமை தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்படும். நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் இவ்வாறு பரபரப்பான தகவல்கள் வெளியாகின. நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது திடீரென கலைப்பதற்கு வாய்ப்புள்ள இந்தச் சூழ்நிலையில், ஜனாதிபதியை அதைச் செய்யவிடாது தடுக்கும் மாற்று வழி - மார்க்கம் - அரசு தரப்புக்கு உண்டு என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாகாண சபைத்தேர்தல் திருத்தச் சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டத்திருத்தத்துக்கு அரசு தரப்பும், ஜனாதிபதி தரப்பும், எதிர்க் கட்சித் தரப்பும் ஒன்றாகச் சேர்ந்து இணக்கம் தெரிவித்திருந்ததால், எந்தத்தடையுமின்றி ஒரேநாளில் அதை நிறைவேற்றமுடிந்தது. இதற்காக நாடாளுமன்றத்தின் நிலையியற்கட்டளைகள் நிறுத்தி வைக்கப்பட்டு, முன் அறிவித்தல் கொடுக்கப்பட்டு முதலாம், இரண்டாம் மற்றும் இறுதிநிலை வாசிப்புக்கள் நேற்றே பூர்த்தி செய்யப்பட்டன.

இப்போது, அந்தத் திருத்தச்சட்டம் உரிய திருத்தங்களுடன் அச்சிடப்பட்டு

(2ஆம் பக்கம் பார்க்க)

மனல் ஏற்றிவந்த 'டிராக்டர்' மோதி சைக்கிளில் வந்த சிறுவன் உயிரிழப்பு!

கொழும்புத்துறையில் நேற்றுச் சம்பவம்

கொழும்புத்துறை,பெப்.4

மணல் ஏற்றிவந்த 'டிராக்டர்' ஒன்று சைக்கிளில் வந்த சிறுவன் மீது மோதியதில் அந்தச்சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். இதில் சம்பந்தப்பட்ட 'டிராக்டர்' நிற்காமல் சென்றுவிட்டது. கொழும்புத்துறை இலந்தைக்குளம் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்புத்துறை சென்மேரிஸ் முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த பூலோகராசா ஜேம்ஸ் (வயது 11) என்ற சிறுவனே இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவனாவான். சிறுவனின் சடலத்தைப் பொலீஸார் யாழ்போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து ஏற்றிவந்த டிராக்டர், ஆள்நடமாட்டம்

(16ஆம் பக்கம் பார்க்க)

கிருஷாந்தி கொலை வழக்கு: மரணதண்டனை ஊர்ஜிதம்

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்குத் தீர்ப்புத்தொடர்பாக எதிரிகள் செய்த மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது. வழக்கில் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து எதிரிகளான ஐந்து இராணுவவீரர்களும் உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவைத்தாக்கல் செய்திருந்தனர்.

தம் மீதான தண்டனையை நீக்குவதற்குப் போதியசாட்சியங்களை குற நஞ்சாட்டப்பட்டவர்கள் முன்வைக்கவில்லை என்று தெரிவித்து வழக்கை விசாரித்த ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழு நேற்று தீர்ப்பளித்தது.

குற்றவாளிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் எவ்வித சந்தேகமுமில்லாமல் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரிகளுக்கு கொழும்பு மேல்

(16ஆம் பக்கம் பார்க்க)

அத்தியாவசியப் பொருள்களின் விலை நேற்றுமுதல் குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் சில அத்தியாவசியப் பொருள்களுக்கான சுங்கத்தீர்வைகள் - நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன.

உலக சந்தையில் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளமை, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளமை, அரசஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டமை போன்ற விடயங்களால் மேலும் சில அத்தியாவசியப்பொருள்களின் விலைகளைக் குறைக்கமுடியவில்லை என்றும் பிரதி நிதியமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பருப்பு சுங்கத்தீர்வையற்ற பொருளாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் இனி ஒரு கிலோ பருப்பின் விலை ஒரு ரூபாவால் குறைவடையும், இந்த விலை வீழ்ச்சி மொத்தவிற்பனையில் இடம்பெறும். இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ செத்தல் மிளகாயின் விலை 155 ரூபாவில் இருந்து 143 ரூபாவாகக்குறைக்கப்படும். சின்ன வெங்காயத்தின் விலை 55 ரூபாவில்

(16ஆம் பக்கம் பார்க்க)

நாளை கடைகளைத் திறக்க வணிகர் கழகம் ஒப்புதல்

யாழ்ப்பணம்,பெப்.4

விடுமுறைதினமான நாளை வியாழக்கிழமை வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறு சகல வர்த்தகர்களுக்கும் யாழ். வணிகர் கழகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இன்றும் நாளையும் தொடர்ச்சியாக இரு தினங்கள் விடுமுறை தினங்களாக உள்ளதால் பொது மக்களின் நலன்கருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை

(16ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு அமைச்சைப் பிரதமர் கோருவதாலேயே முட்டுக்கட்டை

ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு,பெப்.4

பாதுகாப்பு அமைச்சை மீள ஒப்படைக்குமாறு பிரதமர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை சமாதான நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாக இருக்கிறது என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பொது இணக்கப்பாடு காண முடியாமல் உள்ளமை தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு

(16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

சுதந்திர தினத்தைக் கரிநாளாக அனுஷ்டிக்க சகல தமிழ்ச்சக்திகளும் ஒன்றிணைய வேண்டும்

யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

சிங்கள தேசத்தின் சுதந்திரதினத்தைத் துக்க தினமாக அனைத்துத் தமிழ்ச்சக்திகளும் ஒன்றிணைந்து அனுஷ்டிப்போம். இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

இலங்கையின் சுதந்திரதினமான இன்று தமிழர் தாயகப் பிரதேசத்தில் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு பொது அமைப்புகள் பலவும் வேண்டுகோள் விடுத்திருந்தன.

இதற்கு ஆதரவு தெரிவித்து மாவை சேனாதிராஜா எம்.பி.அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்குச் சுதந்திரம் என்பது சிங்கள தேசமக்களுக்கு மட்டுமே என்பதைக் கடந்த 56 ஆண்டுகளாக நாம் உணர்ந்திருக்கின்றோம். இலங்கை சுதந்திரம் பெற்றநாள்முதலாக தமிழ்மக்கள் சிங்கள பேரினவாத அரசுகளினாலும் படையினராலும் அடக்கப்பட்டே வந்துள்ளனர்.

இத்தகைய அடக்குமுறைக்கும் இன ஒடுக்கு முறைக்கும் எதிராக கடந்த இருபதாண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்நிலைமையில்தான் சர்வதேச சமூகத்தின் தலையீட்டாலும் பங்களிப்பினாலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு போர்நிறுத்தம் இடம்பெற்றிருக்கிறது. சிங்கள தேசம் தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டத்தை அங்கீகரித்துப் பேச்சு மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. இதனால் சிங்கள தேச அரசு - தமிழ்த் தேசத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தமொன்றைச் செய்துள்ளது.

இதன் பெறுபேறாகவே, போரினால் அழிந்துபோன தமிழ்த் தேசமக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பெருமளவு நிதி உதவிகளை வழங்க உறுதியளித்தன. அந்நிதியைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாகத் தமிழ்த் தேசத்தில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதனைப் பொறுக்க முடியாத பேரினவாத சக்திகள் ஆட்சி அதிகாரப் போட்டி என்ற வடிவத்தில் ஜனாதிபதியூடாக அரசை வீழ்த்த எடுத்த முயற்சியானது பேச்சின் மூலம் அரசியல் தீர்வைக்காண முடியும் என்ற நம்பிக்கையைத் தகர்த்துவிட்டது.

இதேவேளை, இன்று இலங்கையின் சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் ஒன்றுபட்டு குதூகலித்து நிற்கின்றன. இச்சுதந்திரதினக் கொண்டாட்டம் தமிழ்த் தேசத்தின் ஆட்சியுரிமையை அடக்குவதாகவும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மூலம் எம்மினத்தை ஒடுக்குவதாகவும் எம் இன எழுச்சியை அழிப்பதாகவும் உள்ளது.

எனவேதான் பல்வேறு தமிழ்த் தேச அமைப்புக்கள் சிங்கள தேசத்துச் சுதந்திரதினக் கொண்டாட்டம் தமிழ்த்தேச மக்களின் கரிநாள் - துக்க தினம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளன. இதனைப் பாராட்டுகிறோம்.

ஆகவே, அனைத்துத் தமிழ் அரசியல் சக்திகளும் எழுச்சியுடன் சங்கமித்து தமிழ்தேசத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பு அகலவும் தன்னாட்சி உரிமை நிலை நாட்டப்படவும் ஒத்துழைக்கவேண்டுமென அழைப்பு விடுக்கின்றேன். இதற்கான நடவடிக்கைகளில் நாமெல்லாம் பங்கு பெறுவோம் வாருங்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஒ)

நிமலராஜன் கொலை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

அப்போது நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட, 5 ஆவது சந்தேக நபரான பாலச்சந்திரன் - உதயபாலன் என்வரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கு விசாரணையை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பணித்தார். (ஒ-5)

எழுச்சிப் பேரவையின் கோட்ட மட்டக் கூட்டங்கள்

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கோட்ட மட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான விசேட சந்திப்புகள் அந்தந்தக் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளன.

தீவக கோட்ட உறுப்பினர்களுக்கான சந்திப்பு இன்று காலை 10 மணிக்கு தீவக அரசியல்துறை செயலகத்திலும் - வடமராட்சி கோட்ட உறுப்பினர்களுக்கான சந்திப்பு பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி பேரவை அலுவலகத்திலும் யாழ்.-நல்லூர் கோட்ட உறுப்பினர்களுக்கான சந்திப்பு மாலை 6 மணிக்கு நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

தென்மராட்சிக் கோட்டக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி அரசியல் துறைப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (ஒ-4)

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு நாடகம் குறித்த களப்பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.4

வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நாடக எழுத்துருவாக்கம் மற்றும் சிறுவர் நாடகத் தயாரிப்பு தொடர்பான களப்பயிற்சி நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய ஆசிரிய நிலையம், ஆரம்பக் கல்விப்பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து செயல் திறன் அரங்க இயக்கம் இக்களப் பயிற்சியை நடத்தவுள்ளது.

காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் வள ஆளணியினராக நாடக அரங்கக் கல்லூரியின் இயக்குநர் குழந்தை ம.சண்முகலிங்கம், யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க.இகமலநாதன், செயல்திறன் அரங்க இயக்குநர் தே.தேவானந்த் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

வலிகாமம் கல்விவலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் 50 பேர் இதில் பங்குபற்றவுள்ளனர். பயிற்சியின் முடிவில் அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

ஊரெழு கொலைச் சம்பவம்: நீதிமன்றில் ஒருவர் சரண்!

யாழ்ப்பாணம்,பெப்.4

ஊரெழுப் பகுதியில் அண்மையில் முதியவர் ஒருவர் கொலையுண்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

சட்டத்தரணி முசபாநாதன் மூலம் சரணடைந்த இவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக்கருதப்படும் மூவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இளைஞர் ஒருவரைத் தாக்குவதற்காகக் கடந்த 27 ஆம் திகதி நள்ளிரவு அவரது வீடு தேடிச் சென்ற கும்பல் ஒன்று இளைஞரின் தந்தையான ஊரெழு கற்பகம் 'மில்' பகுதியைச் சேர்ந்த வைத்தி தில்லையம்பலம் (வயது 61) என்பவரைத் தாக்கிக் கொன்றமை தெரிந்ததே. (ஒ-10)

சர்வதேசத் தரப் பாடசாலை கிளிநொச்சியில் நாளை திறப்பு

கிளிநொச்சி,பெப்.4

சர்வதேச தரத்திற்கு ஏற்ப சிறுவர்களை வளர்த்தெடுக்கும் நோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கிளிநொச்சியில் நிறுவியுள்ள சர்வதேச பாடசாலையின் திறப்பு விழா நாளை காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இன்றைய சிறுவர்களுக்கு அடிப்படையில் இருந்தே மண்ணின் சூழலிற்கும் காலத்திற்கும் சர்வதேச தரத்திற்கும் ஏற்ப கல்வி புகட்டி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் நல்நோக்குடன் இப் பாடசாலை நிறுவப்பட்டுள்ளது என்றும் -

இதில் இணைவதற்கு நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு உரிய சீருடைகளை இன்று காலை முதல் தமிழர் புனர்வாழ்வுக் கழக முதன்மைச் செயலகத்தில் நேரில் சென்று பெற்றோர்களை பெற்றுக்கொள்ளுமாறும் - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. (ஒ)

சாவகச்சேரி மருத்துவமனையில் படையினர் நேற்றுச் சிரமதானம்

தென்மராட்சி,பெப்.4

இலங்கையின் 56ஆவது சுதந்திர தினத்தையொட்டிப் படையினரால் சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்றுச் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான சிரமதானப்பணியில் உயரதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பங்கேற்றனர்.

இந்தச் சிரமதானப்பணியில் வைத்தியசாலை வளவு துப்புரவு செய்யப்பட்டதுடன் அங்கிருந்த கழிவுப்பொருள்களும் உழவு இயந்திரங்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன. சிரமதானப் பணி ஆரம்பமாவதற்கு முன்னர் தேசியக்கொடியை 522 ஆவது படையணி அதிகாரி ஆர்.ஆர்.ஏ.பெரேரா ஏற்றி வைத்தார்.

சிரமதானப்பணி நிறைவடைந்ததும் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் உணவுப் பொதிகளும் படையினரால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் மேஜர் பி.ஏ.தயானந்த, சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி செ. அம்பிகைபாகன், மருத்துவமனை ஊழியர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் சாவகச்சேரி வணிகமன்றத்தின் அனுசரணையுடன் இன்று சிரமதானம் மூலம் துப்புரவுசெய்யப்படவுள்ளது.

இந்தச் சிரமதானப்பணியில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நகரசபை உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்களும் ஈடுபடவுள்ளனர். (ஒ-10-31-117)

காங்கேசன்துறைக் கடலில் கைதான கடற்றொழிலாளருக்குப் பிணை

தெல்லிப்பழை,பெப்.4

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் பாதுகாப்பு வலயத்துக்குள் ஊடுருவியவர்கள் என்று கூறி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 4 கடற்றொழிலாளர்களையும் பிணையில் செல்ல மல்லாகம் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

கடந்தமாதம் 23 ஆம் திகதி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடியைச் சேர்ந்த தங்கலிங்கம் புவனேஸ்வரன், தங்கலிங்கம் ஸ்ரீதரன், புவனேஸ்வரன் சந்திரமோகன், கே.ஹரிதாஸ் ஆகிய கடற்றொழிலாளர்களே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அப்போது அவர்களை தலா 2 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் தலா 15ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் செல்ல மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி ச.இளங்கோவன் அனுமதி வழங்கினார்.

இவர்கள் கடற்றொழிலுக்குச் சென்ற படகை சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை தடுத்து வைக்குமாறு பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ-10-150)

சமய சந்நிதிகளில்

வடமராட்சி,பெப்.4

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவிலில் நாளை வியாழக்கிழமை தைப்பூச உற்சவம் நடைபெறவுள்ளது. (ஒ-10-173)

★ ★ ★

சாவகச்சேரி,பெப்.4

உசன் கந்தசாமி கோயில் மணவாளக்கோள விழா நாளை வியாழக்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து தெப்ப உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஒ-10-31)

★ ★ ★

உடுவில், மல்வம் புதுவளவு ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் 11.06 மணிவரையான சுப நேரத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-10-152)

நாளை நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் மற்றும் ஜனாதிபதியின் ஒப்பங்கள் பெறப்படவேண்டும்.

இன்றும் நாளையும் விடுமுறை நாள்கள் எனவே, அந்த ஒப்பங்கள் நாளை மறுதினம் பெறப்பட வாய்ப்புண்டு எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தத் திருத்தச்சட்டத்தை ஜனாதிபதியும் சேர்ந்து முன்வைத்திருப்பதால் அது சட்டமாகும் நடவடிக்கைகள் பூர்த்தியாக முன்னர் நாடாளுமன்றை ஜனாதிபதி கலைக்கமாட்டார் என நம்பப்படுகின்றது.

இதேசமயம்:-

அத்துருகிரிய, 'மிலேனியம் சிற்றி' இராணுவப்பாதுகாப்பு இல்ல விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை ஆய்வு செய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நேற்று நாடாளுமன்றம் நியமித்தது. அதன் முதல் அமர்வு நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

அந்த அமர்வு இடம்பெற்று, ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையாளரும், இராணுவத்தளபதி போன்றோரும் தெரிவுக்குழுவின் முன்னால் விசாரணைக்கு நிறுத்தப்படுவது தமது தரப்புக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி கருதுகிறார் என அவருடன் தொடர்புடையவர்கள் கூறுகின்றனர்.

எனவே, அந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வு இடம்பெறமுன்னரே நாடாளுமன்றைக்கலைப்பதன் மூலம் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளையும் சேர்த்து செல்லுபடியற்றதாக்க ஜனாதிபதி விரும்புகின்றார் என்றும் -

ஆகவே, நாளைமறுதினம் அந்தத்தெரிவுக்குழு கூடுவதற்கு முன்னரே அவர் நாடாளுமன்றைக்கலைப்பார் என எதிர்பார்க்கலாம் என்றும் - அவர்கள் தகவல் வெளியிட்டனர்.

ஆனால், நாடாளுமன்றை ஜனாதிபதி கலைக்கத் தீர்மானித்துள்ளார் என்பதை முன்கூட்டியே அரசுத்தரப்பு அறிந்துகொண்டு, அதை தடுக்க விரும்பினால், அப்படிச் செய்வதற்கு அரசு தரப்புக்கு மாற்று வழி - மார்க்கம் - உண்டு என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்று சபாநாயகருக்குரிய முறைப்படி கையளிக்கப்பட்டு, அதனை மேல் நடவடிக்கைக்காக சபாநாயகர் ஏற்றுக்கொண்டிருப்பாராயின், அந்த குற்றவிசாரணைப் பிரேரணை தொடர்பான விவகாரம் முற்றுப்பெறும் வரை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கமுடியாது என அரசமைப்புச்சட்டம் தெளிவாகக் கூறுகின்றது.

ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஒப்பத்தோடு குற்ற விசாரணைப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால், எந்தவிதக் கேள்வியும் இன்றி மேல் நடவடிக்கைக்காக சபாநாயகர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

நாடாளுமன்றின் அரைவாசி எம்.பிக்களின் ஒப்பத்தோடு அத்தகைய பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டால அதன் உள்ளடக்கத்திற்கு அமைய அதனை மேல் நடவடிக்கைக்காக ஏற்பதா, இல்லையா என்பதை சபா நாயகர் தமது தற்றுணிவில் தீர்மானிக்கலாம் என்றும் -

அரசமைப்புச்சட்டம் கூறுகின்றது.

எனவே, நாடாளுமன்றத்தில் அரைவாசிக்கும் குறையாத எம்.பிக்களின் ஆதரவைப்பெற்றுள்ள அரசு தரப்பு, அவர்களின் ஆதரவோடு ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைச்சமர்ப்பித்து, அதை மேல் நடவடிக்கைக்கு சபாநாயகர் ஏற்றுக்கொண்டால், அப்பிரச்சினை மீதான விவகாரத்துக்கு முடிவு வரும் வரை நாடாளுமன்றை ஜனாதிபதியால் கலைக்க முடியாமற் போய்விடும்.

இத்தகைய பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்த விவகாரம் முடிவுக்குவர ஆகக்குறைந்தது இரண்டொரு மாதங்களாவது பிடிக்கும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப்பெறக்கூடிய நிலையில் ஐ.தே.மு அரசு இல்லை, எனவே, ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை வெற்றிகரமாக நிறைவேற்றி, அவருக்கு எதிராக நடவடிக்கை எதனையும் எடுக்க வைப்பது அரசுக்கு இயலாத காரியமாகும்.

எனினும், அந்தப்பிரேரணையை நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்காக நிலுவையில் தொங்க வைத்திருப்பதன் மூலம் அக்காலகட்டத்தில் நாடாளுமன்றை ஜனாதிபதி கலைத்து விடாமல் அவரது கையைக்கட்டிப்போட முடியும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

காஸாவிலிருந்து யூதக் குடியேற்றங்களை அகற்றுவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் முடிவு

திடீர் அறிவிப்பால் இஸ்ரேல் அரசுத் தரப்பு அதிர்ச்சி

ஜெருசலேம்,பெப்.4

இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள பலஸ்தீனர்களின் காஸா பிரதேசத்தல் இஸ்ரேலியர்களின் 17 யூதக் குடியேற்றங்கள் உள்ளன. அங்குள்ள சுமார் ஏழாயிரத்து ஐந்நூறு யூதர்களையும் அகற்றி வேறு இடத்தில் குடியேற்றுவதற்குத் தாம் திட்டமீட்டுள்ளார் என இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் அறிவித்திருக்கின்றார்.

பிரதமர் ஷெரோனின் அறிவிப்பு இஸ்ரேலிலும் அவரது அரசுக்குள்ளும், அவரது லிகுட் கட்சிக்குள்ளும் பலத்த அதிர்ச்சி அலைகளையும் எதிர்ப்பையும் கிளப்பியிருக்கின்றது.

"பலஸ்தீனப் பிரதேசத்துக்குள் உள்ள - சர்ச்சைக்குரிய - குடியேற்றங்களை அகற்ற லிகுட் கட்சி எண்ணியுள்ளது. காஸாவிலிருந்து 17 குடியேற்றங்களையும் அகற்றுவதற்கான திட்டத்தைத் தயாரிக்கும்படி உத்தரவிட்டுள்ளேன். எதிர்காலத்தில் காஸாவில் யூதர்கள் எவரும் இருக்கமாட்டார்கள் என்ற அடிப்படையில் எனது பணியைத் திட்டமிட்டிருக்கிறேன்"

- என்று பிரதமர் ஷெரோன் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், காஸாவிலிருந்து யூதக் குடியேற்றங்களை அகற்றுவதற்கான கால எல்லை குறித்து அவர் எதுவும் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை.

இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் அமெரிக்க ஏற்பாட்டில் முன்வைக்கப்பட்டிருக்கும் திடீர் திட்டவரைவின்படி, காஸாவிலும் மேற்குக் கரையிலும் அமைக்கப்பட்டுள்ள யூதக்குடியிருப்புகள் அனைத்தும் அகற்றப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், அந்தத் தீர்வுத் திட்டம் முன்னெடுக்கப்படுவது தடங்கல்பட்டு தடைப்பட்டிருக்கும் இச்சமயத்தில் - இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்கள் தொடரும் இவ்வேளையில் - யூதக் குடியிருப்புகளை விலக்குவது பற்றிய திடீர் அறிவிப்பை ஷெரோன் வெளியிட்டிருக்கின்றார். அது இஸ்ரேலில் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. (ம)

ஆஸ்திரேலியாவின் வடக்கு தெற்கு இடையே ரயில் பயணம்

சிட்னி,பெப்.4

ஆஸ்திரேலியாவில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் ரயில் தனது முதலாவது பயணத்தை வெற்றிகரமாக முடித்துள்ளது. இது வரை கனவாக இருந்து வந்த இந்த ரயில் பயணம் இப்போது நனவாகி இருக்கிறது.

தெற்கில் இருந்து புறப்பட்ட இந்த ரயில் மூன்று நாள் பயணத்தின் பின்னர் வடக்கு நகரான டார்வினை வந்தடைந்தது. ஆஸ்திரேலியாவின் சிப்புப் பகுதி என வர்ணிக்கப்படும் வெளிப் பிரதேசத்தைக் கடந்து வடக்குகும் தெற்குக்கும் ஒரு ரயில் பயணித்திருப்பது ஆஸ்திரேலியாவில் இதுவே முதற்றடவை.

இந்தப் பாதையின் மூலம் பின் தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது இலகுவாகும் என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் கருதுகின்றனர்.

ம.தி.மு.க. செயலர் வைகோவுக்கு நிபந்தனையின் கீழ் பிணை

பொடா நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை,பெப்.4

பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோபாலசாமியை நிபந்தனையின் கீழ் பிணை வழங்கி பொடா நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தன்னைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி வைகோ பொடா நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இம்மனு மீதான தீர்ப்பை பொடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி ராஜேந்திரன் நேற்று அறிவித்தார்.

இதன்படி பிரமாணப் பத்திரத்திலுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதில் கையெழுத்திடும் பட்சத்தில் வைகோ பிணையில் செல்லலாம் என நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

மதுரை திருமங்கலத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியமைக்காக 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி வைகோ கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

அமெரிக்க செனட் சபைக்கு தபாலில் வந்த நச்சுப்பவுடர்!

வாஷிங்ரன்,பெப்.4

'அந்திரெக்ஸ்' நச்சுப்பவுடர் போன்ற நச்சுப்பவுடரை தபாலில் அனுப்பி நடத்தும் தீவிரவாதத் தாக்குதல் மீண்டும் அமெரிக்காவில் இடம் பெற்றிருக்கிறது.

வாஷிங்ரனில் அமெரிக்க செனட் சபையின் பெரும்பான்மைத் தலைவர்கள் அலுவலகத்திற்கு 'றிஸின்' நச்சுப் பவுடர் அடங்கிய தபால்கள் அனுப்பப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

அலுவலகத்தின் கடிதப் பிரிவில் கடந்த திங்களன்று இந்தப்பவுடர் அடங்கிய கடிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுவரை எவரும் இந்த நச்சுப் பொருளினால் நேரடியாகப் பாதிக்கப்படவில்லை, எனினும், சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் பணியாற்றும் அனைவரையும் உடன் உரிய மருத்துவ சோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி நச்சுப்பவுடரை மூன்று சோதனைகளுக்கு உட்படுத்தியதில் இரண்டு சோதனைகள் அந்தப் பவுடரில் 'றிஸின் நச்சுப்பொருள் அடங்கியிருப்பதை உறுதிசெய்திருக்கின்றன.

ஆமணக்கிலிருந்து இலகுவாகத் தயாரிக்கக்கூடிய இந்த நஞ்சு, நல்ல பாம்பின் விஷத்தை விட இரண்டு மடங்கு ஆபத்தானது, இலகுவாக சுவாசம் மூலமோ, ஊசிமூலமோ, வாய் மூலமாகவோ உடலுக்குள் செலுத்தக்கூடியது.

'றிஸின்' நச்சுத்தொற்று ஏற்பட்டால் உடன் காய்ச்சல், இருமல், சுவாசப்பையில் அளவுக்கதிகமாக சளி கட்டுதல் ஆகியவையும் அவற்றைத் தொடர்ந்து மூச்சுத்திணறலும் உருவாகி மரணம் சம்பவிக்கலாம் என்று கூறப்படுகிறது.

2001ஆம் ஆண்டு இதேபோன்று, 'அந்திரெக்ஸ்' என்ற நச்சுப்பவுடர், அமெரிக்க உயர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பலத்த பாதுகாப்பு முன்னேற்பாடுகள், எச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவை மூலம் 'அந்திரெக்ஸ்' பாதிப்பையும், பீதியையும் அமெரிக்க அதிகாரிகள் முறியடித்தனர். எனினும், அதற்குப் பெருமளவு நிதியை அவர்கள் செலவிட நேர்ந்தது.

அந்த விவரம் குறித்து விசாலமான விசாரணைகள் நடத்தப்பட்ட போதும், எவரும் அப்போது கைது செய்யப்படவில்லை.

அதன்பின்னர், கடந்த ஒக்ரோபரில் தெற்கு கரோலினாவில் உள்ள சர்வதேச விமானநிலையம் ஒன்றின் தபால் வேலை அலுவலகத்தில் 'றிஸின்' நச்சுப்பெருள் அடங்கிய பொதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது செனட் அலுவலகத்துக்கு தபாலில் இந்த நச்சுப்பவுடர் அனுப்பப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க அதிகாரிகள் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பூமிக்குத் தேவையான மின்சாரத்தை நிலவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்

ரஷ்ய விஞ்ஞானி கூறுகிறார்

மொஸ்கோ,பெப்.4

நிலவிலிருந்து பூமிக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளமுடியுமென ரஷ்ய விஞ்ஞானி எரிக் காலிமோவ் கூறுகிறார்.

பூமியிலிருந்து கிடைக்கும் பெற்றோல், எரிவாயு, யுரேனியம் போன்ற பொருள்கள் 2150 ஆம் ஆண்டுடன் தீர்ந்துவிடும் என்ற கருத்துத் தற்போது நிலவுகிறது. எனவே அவற்றை நிலவில் இருந்து கொண்டுவர முடியும் என்கிறார் எரிக் காலிமோவ்.

பூமிக்கு 1000 வருடங்களுக்குத் தேவையான மின்சாரத்தை நிலவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

அணுசக்தி உற்பத்திக்கு ஹீலியம்-3 என்ற தாதுப்பொருள் மூலப் பொருளாக உள்ளது. இந்தத் தாதுப் பொருள் நிலவில் 50 கோடி தொன்னுக்கு மேல் உள்ளது. அணு உலைகளில் இந்தத் தாதுப் பொருளை முக்கிய எரிபொருளாகப் பயன்படுத்த முடியும். இதனைப் பயன்படுத்துவதால் அணுக்கதிர் வீச்சு ஏற்படாது. விண்கலங்களை நிலவுக்கு அனுப்பி அங்குள்ள யுரேனியம், ஹாலியம் ஆகியவற்றை பூமிக்குக் கொண்டுவரும் செலவு அணு உலைகளில் ஆற்றல் உருவாக்கத்திற்குச் செய்யப்படும் செலவைவிட 10 மடங்கு குறைவானது எனவும் அவர் தெரிவித்தார். (ம-8)

அணுவாயுதத் தயாரிப்புத் திட்டம்: வடகொரியா பேச்சுக்கு இணக்கம்

அணுவாயுதத் தயாரிப்புத் திட்டம் பற்றிய பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு வடகொரியா இணக்கம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதி இந்தப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படும்.

அமெரிக்காவும் வடகொரியாவும் இந்தப் பேச்சில் பிரதான பாத்திரம் வகித்தாலும் ஏனைய முக்கிய நாடுகளும் இதில் கலந்துகொள்ளும் என்று உள்ளூர் வானொலி தெரிவித்தது.

பேச்சுகள் நடைபெறும் திகதியை சனா உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், அணுவாயுதத் தயாரிப்புத் திட்டம் தொடர்பான விடயங்கள் மிக மெதுவாகவே கையாளப்படும் என்று அது தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் கண்காணிப்பின் கீழ் மூடப்பட்டிருந்த வடகொரிய அணு உலைகள் 2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அந்த நாட்டு அரசால் மீண்டும் திறக்கப்பட்டன. அங்கு மின் உற்பத்தியில் மட்டுமே ஈடுபடப்போவதாக அது தெரிவித்தது.

எனினும், அங்கிருந்து அணுவாயுத உற்பத்திக்குத் தேவையான யுரேனியத்தைப் பெறமுடியும் என்பதால் வடகொரியாவின் இந்தத் திட்டத்தை அமெரிக்கா எதிர்க்கின்றது. அதனைத் தடுத்து நிறுத்தும்படியும் அது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

அது குறித்தே தற்போதைய பேச்சுகளில் ஆராயப்படவுள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதிக்குப் பின்னர் இந்தப் பேச்சுகள் தொடர்ச்சியாக நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பேச்சுகளுக்கு முன்னேற்பாடாக இந்த மாத ஆரம்ப நாளகளில் சீனாவும் வடகொரியாவும் இராஜீக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

மாடிக் குடியிருப்பு நொறுங்கி துருக்கியில் 12பேர் மரணம்!

இஸ்தான்புல்,பெப்.4

துருக்கி நாட்டின் கொன்யா நகரில் 11 மாடிக் கட்டடம் ஒன்று நொறுங்கி வீழ்ந்ததில் குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 25இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலர் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். அவர்களை மீட்பதில் மீட்புப் பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். "நொறுங்கிய கட்டடத்தின் உள்ளே இருந்து குரல்கள் வருகின்றன. அங்கே பலர் உயிருடன் இருக்கிறார்கள் என்றே நம்பவேண்டியுள்ளது. அவர்களை அடைவதற்கும் மீட்பதற்கும் நாம் முயன்று கொண்டிருக்கின்றோம்" - என்று நகர ஆளுநர் அஹ்மட் கைகன் நேற்றுத் தெரிவித்தார்.

சனநெருக்கடி மிக்க வீதியில் அமைந்திருந்த இந்தக் கட்டடத்தில் 40 குடியிருப்புக்கள் அமைந்திருந்தன. மேல் மாடிகளிலேயே பெரும்பாலான குடியிருப்புக்கள் அமைந்திருந்தன.

கட்டடம் நொறுங்கி வீழ்ந்ததற்கு குண்டு வெடிப்புக் காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அரச தரப்பு இதனை உறுதிப்படுத்தவில்லை. "குண்டு வெடிப்புச் சத்தம் எதுவும் கேட்டதாக நொறுங்கி வீழ்ந்த கட்டடத்தைச் சுற்றி இருந்த மக்களில் எவரும் தெரிவிக்கவில்லை. பொறியியல் பிழைகள் காரணமாகவே கட்டடம் நொறுங்கியிருக்கக்கூடும்" - என்று அரச அதிகாரி ஒருவர் சி.என்.என். தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

துருக்கியில் குடியிருப்புக்கள் கட்டப்படும் விதம் குறித்து பலத்த சர்ச்சை நிலவுகின்றது. இதனால் நில நடுக்கங்களின் போது கட்டடங்கள் இடிந்து வீழ்வது அதிகரிப்பதால் உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன.

கடந்த சனிக்கிழமையும் வீடு ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 6பேர் உயிரிழந்தனர். (ம)

தாவடி தெற்கு, கொக்குவில்

திருவருள்மிகு ஸ்ரீ ஆதிகாளி அம்பாள் தேவஸ்தானம் (ஸ்ரீ காளி அம்பாள் ஆலயம்)

புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம்

இன்று (04.02.2004) புதன்கிழமை காலை 6.27 மணி முதல் 7.37 மணி வரை

தாவடி தெற்கு, கொக்குவில்.

அனைவரும் வருக! அம்பாளின் அருளைப் பெறுக!!

(28030) (36-11-12-22)

ஸ்ரீ ஆதிகாளி அம்பாள் திருத்தொண்டில்
தேவஸ்தான பரிபாலன சபையினர்.

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இருவர் தொடர்புகொள்ளக்கூடிய Sanyo 5K.m. Cordless ரெலிபோன், வீதி ஓரத்தில் நாட்டக்கூடிய, இருபக்கமும் எழுதக்கூடிய 8'x3' விளம்பரப்பலகைகள், Yamaha 900 Watts ஜெனரேற்றர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.407, பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி. T.P.: 222 5840 (27963)

தனிப்பாவனையில், நல்ல நிலையில் உள்ள Black Stone நிறமுடையதும் NPGL— தொடர் இலக்கம உடையதுமான L.M.L. Select II (bough Lamp Model) விற்பனைக்குண்டு. தொடர்பு: க.பரராஜசேகரம், நவாலி கிழக்கு, மானிப்பாய் (வட்டுக்கோட்டை வீதி). (28001)

நல்ல நிலையிலுள்ள ஓட்டோ உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கனகலிங்கம் (துரை), மடத்தடி மேற்கு, சாவகச்சேரி T.P.:077 6243295. (28005)

ஒரிஜினல் இத்தாலியன் வெஸ்பா மற்றும் பஜாஜ் கிளேசிக் SL ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. திங்கள் வந்தவர் உடன் வரவும் தொடர்பு 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (25015)

வீடு வளவு விற்பனை

அச்சுவேலி தெற்கில் சிவசக்தி கோவிலுக்கு அண்மையில் காலியாக உள்ள வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடி, குமரையா நித்தியானந்தன், முரளி 071-4744943, நடராஜா 0112-59238. (சி-30901)

கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் கோழிக் குஞ்சுகள் இன்று மாலை விநியோகிக்கப்படும். பதிவுசெய்தோரும், தேவைப்படுவோரும் தொடர்புகொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைகோட்டைச் சந்தி. T.P: 3529, 2867.(27927)

தரமான அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் (சிவப்பு/வெள்ளை) ஒருநாள், 2 கிழமை, 4கிழமை, 6கிழமை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.தனபால சிங்கம், (நல்லூர் வீடியோ, சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்தினரச சந்தையடி, நல்லூர். (28012)

புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (சி-33092)

தவறிவிட்டன

கந்தசாமி செல்வராணி என்பவரின தேசிய அடையாள அட்டை (இல. 718072964V), விசேட அடையாள அட்டை (0902022638), கிளினிக காட் என்பன 24-01-2004 அன்று யாழ்ப்பாணத்திற்கும் பரமேஸ்வராச் சந்திக் குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மாயவன் கொமினிகேசன், இராமநாதன் வீதி (பல்கலைககழகம் முன்பாக) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (27781)

விவசாயக் குழுக் கூட்டம்

சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இப் பிரிவு விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய திணைக்கள அதிகாரிகள், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொள்வர்(ம-135)

விற்பனைக்கு

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் UPCO-NO.1, DAIDO கெல்மற்றுக்கள் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
வளர்மதி உதிரிகள்
வாணிபம்,
இல.19, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (28009)

மணமக்கள் தேவை

யாழ்ப்பாணம் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சொந்தமாகக் கடை வைத்து, விவசாயமும் செய்கின்ற, 40வயதுள்ள மணமகனுக்கு படித்த, அழகான, சைவபோசன மணமகளும் 34வயதுள்ள படித்த, அழகான, மணமகளுக்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள பண்பான மணமகனும் தேவை. தொடர்பு: விளம்பரஇல. 2156, C/o உதயன், யாழ்ப்பாணம். (27989)

மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974ஆம் ஆண்டு பிறந்த, 7இல் செவ்வாய் குற்றமுள்ள, அரச தொழில் பார்க்கும் மணமகனுக்கு ஆசிரியை தொழில் பார்க்கும் மணமகள் தேவை. தொடர்பு: விள.இல. 2157, மே.பா. உதயன், யாழ்ப்பாணம். (28002)

மணமகன் தேவை

வலி.கிழக்கு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975இல் பிறந்த, 2இல் நட்புச் செவ்வாய், கிரகபாவம் 22, திருவாதிரை நட்சத்திரம், உயரம் 5' 3", பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சியைச் சேர்ந்த பட்டதாரி தரத்திலுள்ள மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விள.இல.2154, மே/பா உதயன். (27970)

மெய்வல்லுநர் சங்க சான்றிதழ் வழங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.4

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட தொழிற்நுட்ப உத்தியோகத்தர் பரீட்சையில் (2003) சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் சங்கத்தின் செயலாளர் சண்.தயாளனுடன் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பாகத் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

முறைசாராக் கல்வி சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.4

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளில் முறைசாராக் கல்விப் பயிற்சிநெறிகளை மேற்கொண்டு இதுவரை சான்றிதழ்களைப் பெறாத மாணவர்களுக்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

சான்றிதழ்களை இதுவரை பெறாதோர் அன்றையதினம் சமுகமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்துள்ளார். (ம-8)

முக்கிய அறிவித்தல்

இன்று (04-02-2004) புதன்கிழமை நடைபெறவிருந்த வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும், இவ்வருடாந்த பொதுக்கூட்டம் 18-02-2004 புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும் என்பதையும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

ந.நாகேஸ்வரி,
செயலாளர்.

(28006) (19-14-13-26)

விருதுகள் இரவு - 2003
Colours Nite - 2003

இடம்:- கைலாசபதி கலையரங்கம்
காலம்:- 05-02-2004 வியாழன்
நேரம்:- 2.00 மணி
பிரதம விருந்தினர்:- பேராசிரியர் சு.மோகனதாஸ்
(துணைவேந்தர்)

☞ விருதுகளைப் பெறும் வீர, வீராங்கனைகளின் விவரங்களை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

நிகழ்வின் இறுதியில் நிதர்சன் குழுவினரின் இன்னிசை கானங்கள் இடம்பெறும்.

அனைவரும் வருக. அனுமதி இலவசம்!!!

யாழ்.பல்கலைக்கழகம்.
(C/33082) (26-14-13-26)

- விளையாட்டு அவை.

உ
கணபதி துணை

யாழ். வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர்
10ஆம் நாள்
தீர்த்தத் திருவிழா

விநாயகர் அடியார்களே!

இன்று (04-02-2004)புதன்கிழமை காலை 6.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா ஆரம்பமாகி - 9.00 மணிவரை நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள்

மாலை 6.00 மணிக்கு விசேட மங்கள இசை
மா.சிவசுப்பிரமணியம் குழுவினர் (நல்லூர்).

தவில்

K.சிவகுமார் (நாச்சிமார் கோயிலடி)
S.சுதாகரன் (இணுவிலூர்)
P.A.பாலகிருஷ்ணன் (இணுவிலூர்)
K.தயாளன் (இணுவிலூர்)
S.ராமதாஸ் (இணுவிலூர்)

நாதஸ்வரம்

N.P.பாலகிருஷ்ணன் (அளவையூர்)
N.R.K.இரத்தினகுமார்
வாகீஸ்வரன் குழுவினர் (இணுவிலூர்)
I.ஞானசம்பந்தர் (இணுவிலூர்)
N.ராஜகுமார் (இணுவிலூர்)

சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் விழா நடைபெறும்.

ஒளி, ஒலி } கண்ணா சவுண்ட் சேவிஸ், திருநெல்வேலி.

10ஆம் நாள் தீர்த்தத் திருவிழா உபயகாரர்.

கொண்டலடி,
யாழ்ப்பாணம்.

(28004) (19-14-13-26)

இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை
ஸ்ரீ வீரகாளி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்கா[illegible]யம்மாவின் அருந்தவப் புதல்வன்

மணிசாமி அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

N.A.லொட்ஜ்,
றூம் நம்பர் 10, புதிய ஆனந்தா நகைமாடம் மேல்மாடி,
நியூலலிதா ஜூவல்லரி, இல.185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பார்வைமிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை)

(28017)(24-14-13-26)

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்
பயிலுநர் தேவை
(பெண்கள் மட்டும்)

கீழ்க்குறிப்பிடும் பயிற்சிகளுக்கு பயிலுநர்கள் தேவை. பயில விரும்புவோர் தமது பெயர்களை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், K.K.S. வீதி, கோண்டாவில் மேற்கு, தபால் கந்தோரடி கோண்டாவில மேற்கில உள்ள எமது அலுவலகத்தில் 10ஆம் திகதிக்கு முன்பு பதிவுசெய்யவும்.

1. ரேடியோ, T.V., டெக் திருத்தும் பயிற்சி
2. தளபாட உற்பத்திப் பயிற்சி
3. தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி
4. கைவினைப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி (பிரம்பு, சீறட்டை, வாழைநார் போன்ற இயற்கைப் பொருள்கள்.)

குறிப்பு:- பயிற்சிகள் யாவும் இலவசம். (தங்குமிட வசதியுடன்).

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்.

(28000) (26-13-14)

நுண்கலைப் பிரியர்களுக்கொரு நற்செய்தி!

நுண்கலைகள்.....
.....உடுப்பிட்டியில்

வாய்ப்பாட்டு, நடனம், மிருதங்கம், வயலின் } புதிய வகுப்புகள் ஆரம்பம்

தைப்பூச நன்னாள்
05-02-2004 வியாழன் காலை 8மணி

தங்கள் சிறார்களை மேற்படி நன்னாளில் இணைத்து இன்புறவும்.

தொடர்புகள்: திரு.ம.பொ. தர்மலிங்கம்
செயலாளர்
(நுண்கலை மன்றம்).

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

(C/33090) (26-13-14)

வட கிழக்குத் தொழில்நுட்பம்

குளிரூட்டப்பட்ட NET CAFE (24மணிநேர இன்ரநெற் சேவை) மணித்தியாலத்திற்கு ரூபா 50/= மட்டுமே!
அங்கத்தவர்களுக்கு சலுகைக் கட்டணங்கள்.
(விண்ணப்பப்படிவங்களை நிரப்பி அங்கத்துவ அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.)
VIDEO CONFERENCE, NET MEETING மூலம் உலகெங்கிலும் உள்ள உறவினர்களை பரஸ்பரம் பார்த்துக் கொண்டே பேச!
NET 2 PHONE நிமிடம் ஒன்றுக்கு ரூபா 10/= மட்டுமே!
(நவாலி தெற்கு, மானிப்பாய்க்கிளை - 021-2223706யிலும்)
மற்றும் திருமண வைபவங்களை யாழ். நகரிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஒரேநேரத்தில் கண்டுகளிக்க (அவர்களிடம் கணனியும் Web camera, Internet Connection உம் இருத்தல் வேண்டும்)

NET Working, LAN, WAN, SOHO, Net2 Phone சகலவிதமான கணனிகளுக்கிடையேயான வலைப்பின்னல் சம்பந்தமான ஆலோசனைகள், உடன் சேவைகள், தரமான Designகளிற்கும் நாடுங்கள்.

யாழ். நகரில் Caddy Shack கணனிகள் தரமான விலைகளில். குறைந்தளவு கையிருப்பு மட்டுமே உடனடியாக நாடுங்கள்.

சகலவித PIV, AMD புத்தம்புதிய கணனிகள் விற்பனை. அவற்றில் தரமான திருத்த வேலைகளிற்கு நாடுங்கள்.

Mobile Phones, Nokia, Motorola, Ericsson, Sony Ericsson போன்ற சகல செலூலர் தொலைபேசிகள் விற்பனை, உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள் - Mobile Phone Unlocking சேவைகள் (lock உடைத்தல்) போன்றவற்றிற்கும்.
தொடர்பு கொள்ளுங்கள்:

தொடர்பு:
NORTH EAST TECHNOLOGIES (NET)
34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA
T.P. No. 021-2223786 & 0777 - 708498 (Hot Line)

(C33094) (35-14-13-26)

உதயன்

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் பயங்கரவாதம்

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுக் கோமாளித்தனத்தின் சாயம் உலக அரங்கில் வெளுக்கத் தொடங்கிவிட்டது.

இறைமையுள்ள ஏனைய நாடுகளின் மீது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் இந்த இரு நாடுகளும் மேற்கொண்டுவரும் கொடூரப் பயங்கரவாத நடவடிக்கைகள் அம்பலமாகி வருகின்றன.

ஜனநாயகத்தையும், அடிப்படை மனித உரிமைகளையும், விழுமியங்களையும் மதிக்கின்றோம் என்று கூறுகின்ற ஒவ்வொரு அமெரிக்கரும், பிரிட்டிஷ்காரரும் இன்று உலகின் முன் தலைகுனிந்து நிற்கும் கேவல நிலைக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் ஒன்றாகச் சேர்ந்துதான் ஈராக் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் திணிப்பதற்கு முடிவு செய்தார்கள். ஒன்றாகச் சேர்ந்துதான் ஆக்கிரமிப்பை மேற்கொண்டார்கள். ஒன்றாகச் சேர்ந்துதான் ஈராக்கில் மனித குலத்துக்குப் பேரழிவு தரக்கூடிய ஆயுதங்கள் இருப்பதாகக் கூறித் தேடுதல்களை நடத்தினார்கள். இப்போது ஒன்றாகத்தான் சர்வதேச சமூகத்தின் முன்னால் வெட்கித் தலைகுனிந்து நிற்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

மனித குலத்துக்கே பேரழிவு தரும் ஆயுதங்களை ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தயாரித்து வைத்திருக்கின்றார் என்று பிரகடனப்படுத்தி, அந்தப் பேராபத்திலிருந்து உலகை விடுவிக்கப் போகின்றோம் என்று அறிவித்து, அந்த நியாயத்தின் அடிப்படையில்தான் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை புஷ் - பிளயர் கூட்டு ஆரம்பித்தது.

அப்போதே உலகம் அதற்கு எதிராகத் திரண்டு நின்றது. ஐ.நா.சபையின் அனுமதி இல்லாமல் தான்தோன்றித்தனமாக - எதேச்சதிகாரமாக - போர் தொடுப்பது ஆக்கிரமிப்பு நடவடிக்கையே என்று உலகின் பல வல்லரசுகள் உட்பட சர்வதேச சமூகமே எதிர்த்து நின்றது.

ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லை என்பதைக் கூட ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற பெரிய நாடுகள் சுட்டிக்காட்டின. எனவே, இன்னொரு நாட்டின் இறைமை மீது உரிய காரணமின்றிக் கைவையாதீர் என்று அந்த நாடுகள் எச்சரித்தன.

ஆனால், இராணுவ வல்லாதிக்க வெறியில் - மிதப்பில் - நற்கும் அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டின் செவிகளில் அது விழவில்லை.

பேரழிவு ஆயுதங்களை 45 நிமிடங்களுக்குள் பயன்படுத்தக் கூடியதாகத் தயார் செய்துவிடும் உஷார் நிலையில் சதாமும், ஈராக் படையினரும் உள்ளனர் என்று பெரும் பிரசாரத்தை முன்வைத்தபடி ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈராக் படைகள் மோதின. ஆனால், பேரழிவு ஆயுதங்கள் ஒரு தூசுக்குத் தன்னும் அங்கு பயன்படுத்தப்படவில்லை. அப்போதே பேரழிவு ஆயுதங்கள் பற்றிய புஷ் - பிளயர் பிரசாரம் வெறும் 'கப்ஸா' என்பது அம்பலமாகிவிட்டது.

எனினும், முழு ஈராக்கையும் அமெரிக்கா தலைமையான கூட்டுப் படைகள் ஆக்கிரமித்த பின்னர் சுமார் ஒன்பது மாத காலம் ஈராக் முழுவதும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. ஒரு சதவீதம் கூட சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய சான்றுகள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

முதலில் ஐ.நாவின் ஆயுதப் பரிசோதகர்கள் தேடுதல் நடத்தினார்கள். பின்னர் அமெரிக்க ஆயுதப் பரிசோதகர்கள் குருவித்துருவி சல்லடை போட்டார்கள்.

இப்போது அமெரிக்க பரிசோதகர் குழுவின் தலைவர் டேவிட் கே உண்மையைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டார். பேரழிவு ஆயுதங்கள் ஏதும் ஈராக்கில் இருந்ததற்கு சான்றுகள் இல்லவே இல்லை என்று அவர் அடித்துக் கூறுகிறார்.

அதன் பின்னர்தான் தனது பச்சைப் புளுகை சற்றேனும் ஒப்புக்கொள்ளும் நிலைக்கு அமெரிக்க - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சற்று இறங்கி வந்திருக்கின்றது.

எங்கோ தவறு நேர்ந்திருக்கிறது என்கிறார் ஜனாதிபதி புஷ்ஷின் இராணுவ ஆலோசகர் கொண்டலிஸா றைஸ் அம்மையார். ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றன என்ற உளவுத் தகவல் தப்பானது என்பதை ஒப்புக்கொள்ளும் நிலைக்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் வந்துள்ளார்.

உண்மையை அறியத் தாமும் விரும்புவதாக இப்போது கதை விடுகிறார் ஜனாதிபதி புஷ்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரண்டு நாடுகளிலுமே ஈராக்குக்கு எதிரான போர் நடவடிக்கைக்குத் தூண்டுதல் அளித்த உளவுத் தகவல்கள் குறித்து விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிவதற்கு சுயாதீன விசாரணைக்குழு நியமிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வலுத்துவருகிறது. அதற்கு இணங்கவேண்டிய கட்டாய நிலைக்கு புஷ், பிளயர் இருவரும் தள்ளப்பட்டுள்ளனர்.

ஈராக் போன்ற ஒரு பெரிய நாட்டின் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுப்பதற்குக் காரணமான ஒரு பெரிய விடயத்திலேயே சரியான புலனாய்வுத் தகவலைப் பெற முடியாமல் மோசமான தவறை இழைத்த - அதன் மூலம் இறைமையுள்ள ஒரு நாட்டின் மீது ஆக்கிரமிப்புப் போர் என்ற பயங்கர வாதத்தைப் புரிந்த - இந்த இரண்டு பெரிய நாடுகளுக்கும், "பயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என்ற பெயரில் பெரும் சர்வதேச நடவடிக்கையை மேற்கொள்வதற்கு என்ன தகுதி - உரிமை - பாத்தியதை உள்ளது?

அவை என்ன பீற்றிக்கொண்டாலும் சர்வதேச சமூகத்தின் முன்னாலும் நீதியின் முன்னாலும் இரண்டு நாடுகளும் இன்று தலைகுனிந்தே நிற்கின்றன என்பதே உண்மை.

ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்கள் குடாநாட்டில் கிளைகள் திறக்கின்றன

புனர்வாழ்வுப் பணிகளில் உதவுவதற்கு

யாழ்ப்பாணம்,பெப்.4

குடாநாட்டில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கென ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்கள் பல தமது கிளை அலுவலகங்களை இங்கு திறக்கவிருக்கின்றன.

புனர்வாழ்வு, கிராமிய அபிவிருத்தி, பின்தங்கிய கிராம மக்களின் மறுவாழ்வு ஆகிய துறைகளில் பணிபுரியும் நோக்குடன் இந்த நிறுவனங்கள் தமது கிளைகளை இங்கு ஆரம்பிக்கவிருக்கின்றன.

ஆசிய வைத்தியர்கள் சங்கம் என்ற ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனம் தனது கிளையை ஏற்கனவே நிறுவிப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

ஆசிய பசுபிக் மூலவள நிலையம் என்ற ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனம் தனது கிளையை அடுத்த மாத இறுதியில் இங்கு திறக்கவிருக்கின்றது.

குடத்தனைப் பகுதியில் அமையவுள்ள இந்த நிறுவனம் மீனவர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தவிருக்கின்றது.

நிறுவனத்தின் பிரதிநிதி கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்திருந்தார்.

இதைத் தொடர்ந்து ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனங்கள் வேறு சிலவும் தமது அலுவலகங்களை இங்கு திறக்க நடவடிக்கை எடுத்துள்ளன. (ம-3)

அரசியல் இழுபறி, இனவாதக் கூட்டு என்பன சமாதான முயற்சிகளின் வேகத்தைத் தணித்துள்ளன

பேராளர் சங்க நிகழ்வில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்

தென்னிந்தியாவில் தொடரும் அரசியல் இழுபறியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பியின் இனவாதக் கூட்டு ஒப்பந்தமும் சமாதான முயற்சிகளின் வேகத்தைத் தணித்துள்ளன.

- இவ்வாறு கடந்த 31ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற யாழ். - நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ். மாவட்டத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இரு இனவாதக் கட்சிகள் இணைந்து தமிழ் மக்களின் உரிமை, விடுதலை, இயல்பு வாழ்வு என்பவற்றைத் தடுப்பதில் முனைப்பாகச் செயற்படுகின்றன.

இக்கட்டான சவால்கள் மத்தியிலும் மக்களின் நல்வாழ்வுக்காக சமாதானப் பாதையில் உறுதியாக எமது நகர்வுகளை மேற்கொண்டு வருகிறோம்.

எமது விடுதலைப் பயணம் மக்கள் பங்களிப்புடன் பல வெற்றிகளை அடைந்து இன்று சர்வதேச மட்டத்திற்கு உயர்ந்துள்ளது.

கடந்த 50 வருட காலத்தில் அஹிம்சை முறையிலும், போராட்டத்தாலும் பெற்ற வெற்றி அநேகம். அவற்றைவிட சமாதான காலத்தில் இந்த இரண்டு ஆண்டுகளில் நாம் சாதித்தவைகளும், அரசியல் வியூக நகர்வு வெற்றிகளும் ஏராளம்.

சர்வதேச அரங்கில் இன்று நாம் அங்கீகாரம் பெற்றுள்ளோம். எமது கொள்கைப் பற்றையும் அரசியல், சமூக, பொருளாதார கட்டுமானங்களையும் வியந்து, மதித்து சர்வதேச பிரதிநிதிகளும் எமது தாயகம் வந்து செல்கின்றனர்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது தேசத்தின் கட்டுமானங்களுடாக தொண்டாற்றவேண்டும். அப்போதே எமது விடுதலையை விரைவுபடுத்த முடியும். இதுவே தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களது கடமையும் பொறுப்பும் அர்ப்பணிப்புமாகும் - என்றார். (ம-8-30)

பல்கலைக்கழக ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இரண்டாவது நாளாக நேற்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட 15 அம்சக் கோரிக்கைகளையும் பல்கலைக்கழக நிர்வாகம் நிறைவேற்றவில்லையெனத் தெரிவித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் நேற்றுக்காலை பல்கலைக்கழகத்துக்கு வந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர் சங்கத்தினர் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இன்று புதன்கிழமை மாலை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் தம்மை மீண்டும் சந்திக்கவுள்ளனர் என்று ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்.

வேலைநிறுத்தப் போரட்டத்தில் ஊழியர்கள் ஈடுபட்டபோதும் தினவரவு பதிவேட்டில் கையொப்பம் இட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகப் பாதுகாப்பு பிரிவினர், நீர்வழங்கல் சேவைப் பிரிவினர் தவிர்ந்த அனைத்து கல்விசாரா ஊழியர்களும் இப் போரட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)

ஜே.வி.பியின் தலைவர் தோன்றும் காட்சிகளை ஒளிபரப்ப அரச தொலைக்காட்சிகளுக்குத் தடை

ஜனாதிபதி சந்திரிகா விதித்துள்ளார்

கொழும்பு,பெப்.4

அரச ஊடகங்களில் ஒரு பகுதி ஜே.வி.பிக்கு ஆதரவான நிலையைக் கொண்டிருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டை அடுத்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தோன்றும் அரச தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இரண்டுக்கு ஜனாதிபதி சந்திரிகா தடைவிதித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று ஐ.ரி.என். தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக இருந்த சோமவன்ஸவுடனான நேர்முக நிகழ்ச்சியொன்றையும், ரூபவாஹினித் தொலைக்காட்சியின் மற்றொரு நிகழ்ச்சியையும் ஜனாதிபதி நிறுத்தியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

தொலைக்காட்சியில் சோமவன்ஸவுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை சு.க - ஜே.வி.பி. கூட்டு ஒப்பந்த நிகழ்ச்சியில் இடம்பெற்ற உரைகளை ஒளிபரப்புவதற்குப் பயன்படுத்தலாமென அரச ஊடகங்களின் தலைவர்களுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி தெரிவித்தார் என அறியவருகின்றது.

அரச ஊடகங்களின் ஒரு பகுதி அளவுக்கதிகமாக ஜே.வி.பிக்கு ஆதரவான இனரீதியான நிலையைக் கொண்டிருப்பதாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் ஜனாதிபதியின் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் ஜனாதிபதிக்குத் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் ஊடகங்களுக்கும் ஜே.வி.பிக்கும் ரூபவாஹினியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தகவல்களைத் தெரிவிப்பதாகவும் ஹரீம் பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார். இதனையடுத்து ரூபவாஹினியின் நிர்வாகத் தலைவர் நிஸாந்த ரணதுங்கவை அரசியல் தொடர்பான நிகழ்ச்சிகளின் பொறுப்பிலிருந்து விடுவிப்பதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

சேதமடைந்துள்ள அச்சுவேலி வீதி இதுவரை திருத்தப்படவில்லை

பொதுமக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்ப்பாணத்துக்கும் வடமராட்சிக்கும் இடையிலான பிரதான போக்குவரத்துப் பாதையான அச்சுவேலி வீதி பலத்த சேதமடைந்துள்ளது. பல மாதங்களாகியும் இதனைச் சீர்செய்வதற்கு உரிய தரப்புகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததையிட்டு பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை வீதியிலிருந்து அச்சுவேலிக்குச் செல்லும் இந்த வீதியில் முன்னர் அங்காங்கே சிறுசிறு குழிகள் காணப்பட்டன. அண்மைக்காலமாக அக்குழிகள் பாரிய பள்ளங்களாகிவிட்டன. போக்குவரத்து மேற்கொள்ளமுடியாத அளவிற்கு வீதி சேதமடைந்துள்ளது.

இதனைவிட அச்சுவேலி மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மையில் இரண்டு பாரிய பள்ளங்கள் காணப்படுகின்றன. இதனால் வாகன சாரதிகள் தமக்குரிய பக்கத்திலிருந்து விலகி மறுபக்கத்தால் செல்லவேண்டியுள்ளது.

இவ்வீதி வழியாக யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, உரும்பிராய் ஆகிய பகுதிகளுக்கான பஸ்கள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்றன. இதனால், இவ்வீதி எந்த நேரமும் சனநெருக்கடி மிகுந்ததாகவே காணப்படுகிறது.

இவற்றைத் தவிர்க்கும் வகையில் இவ்வீதியைச் செப்பனிடுவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

இதேவேளை, பிரதான போக்குவரத்து மார்க்கமான வல்லைப் பாலத்தின் இரு மருங்கிலும் இரண்டு பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. இதனூடாக ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய நிலை காணப்படுகிறது.

இதனைச் சீர்செய்யாதுவிட்டால் மேலும் பாரிய பள்ளமாகிப் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-8-5)

அளவெட்டி தபாலகத்துக்கு கட்டடம் அமைக்கக் காணி

வெளிநாட்டவர் உதவியுடன் கொள்வனவு

யாழ்ப்பாணம்,பெப்.4

அளவெட்டியிலிருந்து சென்று வெளிநாடுகளில் வசிப்பவர்களின் நிதி உதவியுடன் அளவெட்டி தபால் நிலையத்துக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்க காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த 3 பரப்புக் காணியைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் தபால் நிலையத்தில் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. அளவெட்டி தபால் நிலைய ஆலோசனைக் குழுத் தலைவர் இ.சிவநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சட்டத்தரணி பொ.சுந்தரலிங்கம், பண்டிதர் நாகலிங்கம், அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் க.கந்தசாமி, அளவெட்டி தபால் நிலைய தபாலதிபர் எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நன்கொடையாக வழங்கப்பட்ட காணியினுடைய ஆவணங்கள் தபால்நிலைய அதிபர் எஸ்.சுப்பிரமணியத்திடம் கையளிக்கப்பட்டன.

நீண்ட காலமாக தனியார் கட்டடத்தில் இயங்கிய இத்தபாலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கவென அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் முன்பாக இக்காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இதற்கென நிரந்தரமான கட்டடம் நவீன வசதிகளுடன் நிறுவப்படும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

நாளை

தை 22
வியாழக்கிழமை
(05.02.2004)
திதி : சதுர்த்தசி
பகல் 2.32 வரை
நட்சத்திரம்: பூசம்
பின் இரவு 1.47 வரை
தைப்பூசம்
சுபநேரம்: 8.05 - 9.35
ராகுகாலம்: 2.05 - 3.35
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

கையளவு மனசு கடலளவாகப் பெருகினால் சிறியவரும் பெரியவர் ஆகலாம்.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By: Royal Industries, Colombo. ☎ 0112334603

சத்திரத்துச் சந்திக்கு அருகில் ⇨

ஒரு விநியோகத்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்தி வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2567

நேரச்சுப் பொறி (ஒப்செற்) இயக்குநர் தேவை

யாழ்.சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள

அன்பு அச்சகத்திற்கு

நேரச்சுப் பொறி இயக்குநர் தேவை.

தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 15-02-2004 இற்கு முன் வேண்டுகை செய்யுமாறு வேண்டப்படுகிறீர்கள். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

அன்பு அச்சகம்

யாழ். - கண்டி நெடுஞ்சாலை,
கிளிநொச்சி. (27950)(40-13-14-32)

19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 – 04 – 1920



மறைவு 04 – 02 – 1985

அமரர் நாராயணசாமி இராமசாமி

பத்தொன்பது ஆண்டுகள் பறந்தோடி விட்டாலும்
பசுமை நினைவுகள் மட்டும் மறையவே மறையாது!

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,
119,39/2,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (27984) (26-13-14-32)

- மக்கள், மருமக்கள், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கடத்தத் தயாராக இருந்த வாகனங்கள் பொலீஸாரால் மீட்பு!

வவுனியாவிலிருந்து கடத்தத் தயாராக இருந்த வாகனங்கள் சிலவற்றை கைபபற்றி இருப்பதாக வவுனியா பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு வான், இரண்டு பஸ், ஒரு லொறி என்பன கைப்பற்றப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வாகனங்களின் இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம் என்பன மாற்றப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஆன்மீக நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.4

பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவின் 80ஆவது அவதாரத் திருநாளுக்காக 'தெய்வீகத் தேன்துளிகள்' என்ற நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு யாழ்.பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வழமையான பேயாதின நிகழ்ச்சிகளும் காலை 9.00 மணி முதல் அங்கு இடம்பெறும். (ஐ)

கற்றல் உபகரணம் அன்பளிப்பு

வலி.தெற்கு,பெப்.4

வலிகாமம் வடக்கிலுள்ள மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தினிடம் அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கவென 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கைளிக்கப்பட்டுள்ளன.

லயன்ஸ் கழகங்களின் யாழ். மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா, மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரனிடம் இவற்றைக் கையளித்தார்.

நீர்கொழும்பு லயன்ஸ் கழகம் கந்தான - ஜா எல லயன்ஸ் கழகம், கொட்டாஞ்சேனை தெற்கு லயன்ஸ் கழகம் என்பவற்றால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இக்கற்றல் உபகரணங்கள் அண்மையில் நடைபெற்ற லயன்ஸ கழகத்தின் வலய ரீதியிலான கருத்தரங்கின்போது கையளிக்கப்பட்டன.

இக்கற்றல் உபகரணங்களின் பெரும் பகுதி மகாஜனக் கல்லூரி மாணவர்களுக்கும் ஏனையவை வேறு பாடசாலை மாணவர்களுக்கும் விரைவில் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-152)

பிரிவுத்துயரின் முதலாம் ஆண்டு

தாயின் மடியில் 16 – 02 – 1978

தேய்வத்தின் மடியில் 04 – 02 – 2003

யேசுதாசன் றொசானி

ஆண்டு ஒன்று உதிர்ந்திடினும்
ஆறவில்லை எம் இதயம்
ஈண்டு உம்மை நினைந்தே வாழுகிறோம்.
ஆண்டவனில் அமைதி அடைந்திடுவீர்!

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இன்று (04.02.2004) புதன்கிழமை காலை 7.00மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் நினைவு இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காக ஜெபிக்குமாறும், இல்ல உபசரணையில் பங்குபெறுமாறும் அன்போடு அழைக்கின்றோம்.

ம.யேசுதாசன் (மதுராவி)
இல.22.ஏ.வி.றோட்,
கொழும்புத்துறை. (27976)(35-14-13-32)

துயருடன்
தந்தை, தாய், சகோதரர், உறவினர்கள்.

2ஆவது ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 05 – 11 – 1953

ஆண்டவர் பாதத்தில் 04 – 02 – 2002

அமரர் கந்தையா சத்தியசீலன்
(சத்தி)

அன்பின் அப்பாவே! எங்கள் ஆருயிரே!!
எம்மைக் கண்கலங்காது காத்து வளர்த்தீரே!
துணையாயிருந்து வழிநடத்த வேண்டிய நீங்கள்
எம்மைத் தவிக்க விட்டுச் சென்றீரோ?
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன - அப்பா
ஆலமரமாய் நீங்கள் இருந்தீர்கள்
ஆலமரமும் சரிந்தது; ஆனந்தமும் பறிபோனதே!
இயேசுவுடன் உம் ஆத்மா
இருக்கும் என அவரைப் பிரார்த்திக்கின்றோம்.

டச்சு வீதி,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (27866) (26-14-16)

- அன்பு மனைவி, பிள்ளைகள்.

TOGETHER WE CAN ROTARACT CLUB MAKE IT HAPPEN

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்
"Computer Express"
கணனி சஞ்சிகையுடன் இணைந்து நடத்தும்
மாபெரும் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு

கருத்தரங்கில் உள்ளடங்கும் விடயங்கள்:-

* கணனி பற்றிய அறிமுகம்.
  1) Hardware 2) Software 3) Liveware
* Operating System- windows 98
* Internet & E-mail
* E- Commerce
* இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளும் அதற்குரிய தகைமைகளும்.
* கணனித் தொழில்நுட்பத்தில் காணப்படும் கற்கை நெறிகளும் அதற்குரிய விளக்கங்களும்.
* On-Line Exam பற்றிய விளக்கம்.

இடமும் காலமும்
1) யாழ். மத்திய கல்லூரி மண்டபம்.
05-02-2004 வியாழன் மு.ப.9.00மணி- பி.ப 4.00 மணி.
2) யாழ்.இராமநாதன் கல்லூரி மண்டபம்
08-02-2004 ஞாயிறு மு.ப.9.00 மணி-பி.ப 4.00 மணி வரை

இக்கருத்தரங்கில் பங்குகொள்ளும் அனைவருக்கும்
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- கையேடுகள் வழங்கப்படும்.

அனுமதிக் கட்டணங்கள்: 1) பாடசாலை மாணவர்களுக்கு ரூ.50/=
2) ஏனையவர்களுக்கு ரூ.100/=

றோட்டரக்ட் கழகம்
சுன்னாகம்

(C/32563) (40-14-16-26)

மரண அறிவித்தல்கள்

திருமதி கதிரவேலு பூமணி

அரசடி வீதி, இருபாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு பூமணி அவர்கள் நேற்றுமுன்தினம் (02.02.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பு - தெய்வானையின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாரிமுத்துவின் அன்பு மருமகளும் கனகமணியின் அன்புச் சகோதரியும் தர்மகுலசிங்கம் (கிளி), சரோஜினிதேவி, ஜெயபாலசிங்கம் (பாலா), கருணாநிதி (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்), உருத்திரகுமார் (உதயன் - காஸ்நடை சினைப்படுத்தும் நிலையம், முல்லைத்தீவு), சுரேந்திரன் (இந்திரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தவதனி, பாலச்சந்திரன், செல்வமலர், யசோ, றஸ்மின்றாஜ், றஞ்சிதமலர், டொய்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜிபாரத் ரமணா (மக்கள் வங்கி, சங்கானை), மரா, முகுந்தன், மதுரா, கஜமுகி, குகன்ஜா, பௌசிகா, அன்புஜா, நிருந்தா, நருபன், ஜனா, சஞ்சுதா, சுபிதா, சஜிதா, சஞ்சீபன், சாரா, சானுஜன், தனுஷன், பைரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, காலை 10 மணிக்கு பூதவுடல் இருபாலை பொதுமயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பூமகள் வாசா', அரசடி வீதி,
இருபாலை. (27999) (14-13-32)

தகவல்:
- குடும்பத்தினர்.

தம்பையா கனகரத்தினம்

பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த தம்பையா கனகரத்தினம் 31.01.2004 அன்று அகாலமரணமானார்.

அன்னார் தம்பையா - நாகம்மா தம்பதிகளின் மூத்த மகனும் திலகவதியின் அன்புக் கணவரும் யோகரத்தினம் (சிவம்), தருமரத்தினம், செல்வரஞ்சிதம், தவரஞ்சிதம் ஆகியோரின் சகோதரரும் சரஸ்வதி, யோகேஸ்வரி, அமரர் நவரத்தினம், நற்குணராசன் ஆகியோரின் மைத்துனரும் விஜயகுமார் (ஜேர்மனி), லலிதா (கனடா), உதயகுமார் (ஜேர்மனி), விஜயலலிதா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), வைகுந்தகுமார் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமலர், சந்திரசேகரம், குகன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), நிர்மலா, ஆகியோரின் அன்பு மாமனாரும் மிதுனன், விஜிந், தர்மிலா, சுவேதா, நிவேதா, போமினா, மெனதன், யானுஜா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2004) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி,கோப்பாய். (27988) (13-14-32-41)

தகவல்:
த.யோகரத்தினம் (சிவம்)

குடாநாட்டு தொல்பொருள் சின்னங்களை பொறுப்பேற்கத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.4

குடாநாட்டில் உள்ள தொல் பொருள் சின்னங்களைப் பொறுப் பேற்றுப் பராமரிக்க தொலபொருள் திணைக்களம் நடவடிக்கை எடுத் துள்ளது.

இது தொடர்பாக நேரில் ஆராய் வதற்காக தொல்பொருள் திணைக் களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சென விரத்ன தலைமையில் 40 பேர் அடங கிய குழு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

குடாநாட்டில் கந்தரோடையில் தொல்பொருள்கள் காணப்பட்ட பிர தேசம் மட்டும் தொல்பொருள் திணைக் களத்தால் முன்னர் பொறுப்பேற்கப் பட்டு பராமரிக்கப்பட்டது.

நல்லூர் மந்திரிமனை, யமுனா ஏரி, சங்கிலியன் தோப்பு போன்ற பகுதிகளையும் இத்திணைக்களம் இனிப் பொறுப்பேற்றுப் பராமரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராயவும் குடா நாட்டில் தொல்பொருள்கள் காணப் படும் ஏனைய பிரதேசங்களை இனம் காண்பதற்காகவும் இக்குழு யாழ்ப் பாணம் வந்துள்ளது.

ஒருவாரம் இங்கு தங்கி நிற்கும் இக்குழு, யாழ். அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர்கள் உட்பட பலரைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளது.

(ம-3)

கண்ணி வெடிப்புச் சம்பவங்களில் கடந்த ஆண்டு 50 பேர் பாதிப்பு

யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டுப் பிரிவு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

குடாநாட்டில் கடந்த வருடம் இடம் பெற்ற 43 கண்ணி வெடிப்புச் சம் பவங்களில் 50 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர். யாழ். மாவட்ட கண்ணி வெடி அகற்றும் செயற்பாட்டுப் பிரிவு இத னைத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் செயற்பாடுகள் குறித்து அந்தப் பிரிவு விடுத்துள்ள வருடாந்த அறிக்கையில் இத்தக வல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணி மற்றும் மிதிவெடிகளில் சிக்கிக் கடந்த ஆண்டு மூவர் உயி ரிழந்துள்ளனர்; 9 பேர் கால்களை யும் ஐவர் விரல்களையும் அறுவர் பார்வையையும் இழந்துள்ளனர்.

அதேநேரம், கண்ணிவெடி அகற் றும்போது, கண்ணி அகற்றும் நிறு வனங்களைச் சேர்ந்த நால்வர் காய மடைந்துள்ளனர்.

1995ஆம் ஆண்டுமுதல் கடந்த டிசெம்பர் வரை 643 கண்ணி மற்றும் மிதிவெடிச்சம்பவங்கள் இடம்பெற்றுள் ளன. இதில் 66 பேர் உயிரிழந்துள் ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ம-3)

யாழ். முற்றவெளிப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நவீன வசதி களைக் கொண்ட யாழ். பிரதம தபாலகக் கட்டடத்தின் ஒரு தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

புதிய தபாலகத்தின் திறப்பு விழா தாமதமாகி வருவது குறித்து பொதுமக்கள் விசனமடைகின்றனர். *(படம்: அரியாலைச் செய்தியாளர்)*

மாணவரின் தேசப்பற்றை வளர்க்க விசேட நிகழ்ச்சித் திட்டத்தொடர்

வலி.தெற்கு,பெப்.4

மாணவர்களிடையே தேசாபிமானம், பரஸ்பர நட்புறவு, சகோதரத்துவ உணர்வு, தயவு தாட்சண்யம் என்பவற்றை விருத்தி செய்யக்கூடிய நிகழ்ச்சித் திட்டத்தொடர் ஒன்றைத் தயாரித்து சுதந்திர தினத்தையொட்டி நடைமுறைப்படுத்தும்படி மனிதவள அபிவிருத்தி கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வீ.கே.நாணயக்கார பாடசாலை அதி பர்களுக்கு அறிவித்துள்ளார்.

நாளைமறுதினம் 6ஆம் திகதி பாடசாலை மட்டத்திலான இவ்வகை நிகழ்ச்சித் திட்ட மொன்றினை நடைமுறைப்படுத்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இத்தினத்தில் தேசப்பற்றுடன் கூடிய தேசிய கீதத்தைப் படித்தல், தேச விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடல், தேச விடுதலைக்காக உழைத்த பெரியார்களைப் பற்றிய சொற்பொழிவுகள், மதவழிபாடுகள் என்பவற்றை பாட சாலைகளில் நிகழ்த்தலாம் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு புத்தகங்கள், உபகரணங்களை அன் பளிப்பாக வழங்கல், அநாதைச் சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்களுக்கு உணவளித் தல், கட்டுரை, கவிதை, சித்திரம், நாடகம் போன்ற கலைத்துறை ஆக்கங்களில் மாணவர்களை ஈடுபடச் செய்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் வீ.கே.நாணயக்கார தெரிவித் துள்ளார்.

(ம-8-152)

அரச ஊழியர் தொழிற்றிறனை வளர்க்க விசேட பயிற்சி வகுப்புகள்

ஜி.ரி.இசற் அமைப்பு நடத்துகிறது

யாழ்ப்பாணம்,பெப்.4

நவீன தொழில்நுட்பத்தை அரச ஊழியர்களுக்குப் போதித்து, அதன் மூலம் அவர்களின் தொழிற்றிறனை வளர்க்கும் நோக்குடன் விசேட பயிற்சி வகுப்புகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

நிறுவனத்தின் கேட்போர் கூடத் தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் தப் பயிற்சி வகுப்புகள் பல்வேறு தரங்களில் நடத்தப்படுகின்றன.

உலக மயமாக்கலுக்கு ஏற்ற வகையில் அரச ஊழியர்கள் தமது பணிகளை விரிவுபடுத்துவதற்கு வசதி யாக நவீன தொழில் நுட்பப் பயிற்சி கள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சிகளை மேற்கொள்ள பயிற்சி மையம் ஒன்று சகல வசதி களுடனும் அமைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவ னம் இந்தப் பயிற்சிகளுக்காக பல லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

குடாநாட்டில் எதிர்வரும் காலத் தில் இடம்பெறும் பாரிய புனர்வாழ் வுப் பணிகளுக்கு ஈடுகொடுக்கத்தக்க வகையில் அரச ஊழியர்களை தயார்ப் படுத்தவே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்று அந்த நிறு வன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-3)

'சாகன்யா' திட்டத்தின் கீழ் இதுவரை எவருக்கும் கடன் வழங்கப்படவில்லை

பொறுப்பு ஆதனம் கேட்கிறது வங்கி; கைத்தொழிலாளர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.4

கைத்தொழில் அபிவிருத்திச் சபை யும் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சும் இணைந்து குடாநாட்டில் அறிமுகம் செய்துள்ள 'சாகன்யா' கடன் திட்டத்தின் கீழ் இதுவரை எவருக்கும் கடன் வழங் கப்படவில்லை என்று முறைப்பாடு கள் தெரிவிக்கப்படுகின்றன.

குடாநாட்டில் உள்ள கைத்தொழி லாளர்களுக்கு உதவும் வகையில் கைத்தொழில் அபிவிருத்திச்சபை வர்த் தக வங்கி மூலமாக இக்கடன் திட் டத்தை அறிமுகம் செய்தது.

இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறுவதற்காகப் பெரும் எண்ணிக்கை யானவர்கள் விண்ணப்பித்தனர்.

கடன் பெறும் தொகைக்குப் பொறுப் பாக ஆதனம் சமர்ப்பிக்க வேண்டும் என்று வர்த்தக வங்கி நிபந்தனை விதித்துள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அழிவு கள் காரணமாக ஆதனம் தொடர் பான உறுதியை வழங்க முடியாத நிலையில் பல கைத்தொழிலாளர் கள் உள்ளனர். இதன் காரணமாக கடனை அவர்கள் பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது.

அதேவேளை -

ஆதன உறுதிகளை வழங்கிய சில கைத்தொழிலாளர்களுக்கு கடன் வழங்க வர்த்தக வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது என்று கைத்தொழில் வர்த்தக சங்க வட்டாரங்கள் தெரி வித்தன. ஆதன உறுதிப்பாடு எதுவும் இன்றி இக்கடனைப் பெற விசேட ஏற்பாடு செய்யவேண்டும் என்று பல கைத்தொழிலாளர்கள் கோருகின்ற னர்.

(-3)

சாவகச்சேரி சாயி நிலையம் சொந்த இடத்தில்!

யாழ்ப்பாணம்,பெப்.4

சாவகச்சேரிப் பகுதியில் இயங்கி வந்த பகவான் சத்தியசாயி நிலை யம் நாளை வியாழக்கிழமைமுதல் தனது சொந்த இடத்தில் மீண்டும் செயற்படவுள்ளது.

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதி யில் நீண்டகாலமாக இயங்கிவந்த இந்நிலையம், தென்மராட்சிப் பகுதி யில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் 2000ஆம் ஆண்டுமுதல் செயலிழந் திருந்தது. அதனை மீளவும் இயக்கு வதற்கான ஆரம்பவிழா நாளை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வட பிராந்திய பகவான் சத்திய சாயி நிலைய இணைப்பாளர் ஆர். வசந்தசேனன், ஆலோசகர் செ. சிவ ஞானசுந்தரம், நிலையத்தின் ஆரம்ப காலத் தலைவர் டாக்டர் கே. கரு ணானந்தன், சாவகச்சேரி நோ.க. பாட சாலை அதிபர் சு.தம்பிமுத்து ஆகி யோர் ஆசியுரைகளை நிகழ்த்துவர்.

(ம-5)

வவுனியாவில் சிறுமிமீது பாலியல் பலாத்காரம்

வவுனியா,பெப்.4

வவுனியா தாளிக்குளம் பகுதியில் 12 வயதுச்சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட தாக வவுனியா பொலீஸ் நிலையத் தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள் ளது.

சிறுமி தனியாக வீட்டில் இருந்த போதே முச்சக்கர வண்டியில் சென்ற இளைஞர் அவரை பாலியல் பலாத் காரத்திற்கு உட்படுத்தினார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

பாதிக்கப்பட்ட சிறுமி வவுனியா பொது மருத்துவமனையில் மருத் துவ பரிசோதனைக்காக நேற்றுமுன் தினம் அனுமதிக்கப்பட்டார் என பொலீ ஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகளைப் பொலீ ஸார் மேற்கொண்டுவருவதாகவும் தெரி விக்கப்படுகிறது.

(ம-8-164)

இயங்க முடியாத நிலையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை

யாழ். கைத்தொழிலாளர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,பெப்.4

கைத்தொழில் அபிவிருத்திச்சபை யின் யாழ். அலுவலகம் வளங்கள் ஏதுமின்றி பணியாற்றமுடியாத நிலை யில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட் டது.

குடாநாட்டின் கைத்தொழில் அபி விருத்தியை நோக்கமாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த அலுவல கத்தில் ஊழியர் பற்றாக்குறை நிலவு கிறது. வாகன வசதி இல்லை. தலை மையகத்தில் இருந்துவரும் சிங் களக் கடிதங்களை மொழிபெயர்க்க ஊழியர் இல்லை.

இதன் காரணமாக இந்த அலுவ லகம் முழுமையாக செயற்படமுடி யாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தகால யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள கைத்தொழில்துறையை மீளக்கட்டி எழுப்புவதற்கு இந்த அலு வலகத்தால் எந்தப் பயனும் பெற முடியாதுள்ளதாக கைத்தொழிலாளர் கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பெயரளவில் மட்டும் இந்த அலு வலகம் செயற்படுகின்றது என்றும் -

கைத்தொழிலாளர்களுக்கு எந்த உதவியும் வழங்குவதில்லை என் றும் - கைத்தொழிலாளர்கள் மேலும் கூறினர்.

(ம-3)

மருந்துக்குத் தட்டுப்பாடு

கோப்பாய்,பெப்.4

கோப்பாய் சுற்றயல்கூறு மருத் துவமனையில் முக்கியமான அன்றி பயற்றிக் மருந்துகளான அமெக்ச லின், கொட்ரிம், பக்ரிம், எரித்திரோ மைசின் ஆகிய மருந்துகளுக்குத் தட்டு பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இம்மருந்துகளை வெளியில் வாங்குமாறு வைத்தியசாலையில் கூறப் படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலைமைகள் போர் இடம்பெற்ற காலங்களில் ஏற்பட்ட தாகவும், இம்மருந்துகள் தட்டுப்பாடு நிலவுவதற்கான காரணம் தெரிய வில்லையெனவும் தெரிவிக்கப்படு கிறது.

(ம-8-72)

தெல்லிப்பழை வைத்தியசாலையை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.4

வலி.வடக்கு அதிபாதுகாப்பு வல யத்துக்குள் அமைந்துள்ள தெல்லிப் பழை அரசினர் வைத்தியசாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண சுகாதாரப் பணிப் பாளர் ஆகியோர் இணைந்து இந்த வைத்தியசாலையை இயக்கத் தேவை யான நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளனர்.

இந்தப் பணிகளை முன்னெடுப் பதற்காக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சிவபாதம் தலை மையிலான குழு தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு கடந்த வாரம் விஜ யம் செய்தது; அங்குள்ள சேதங் களை மதிப்பீடு செய்துள்ளது.

வைத்தியசாலையின் கட்டடம் மட்டுமே தற்போது இருப்பதாகவும் அதன் கூரையைக் காணவில்லை என்றும் அக்குழுவினர் தெரிவித்தனர்.

புதிதாகக் கூரைகள் போட்டு வைத்தியசாலையைப் புனரமைக் கும்பணி ஆரம்பிக்கப்படவிருக்கின் றது.

அங்கு செயற்பட்ட புற்றுநோய் சிகிச்சை நிலையத்தையும் மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

கட்டடத் திருத்தப் பணிகள் பூர்த்தி யானதும், மக்கள் எந்தவித பாது காப்புக் கட்டுப்பாடுகளும் இன்றி அங்கு சென்றுவரக்கூடிய சூழ் நிலையை ஏற்படுத்த மாகாண ஆளு நர் நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் இந்த வைத்திய சாலை பாதுகாப்பு வலயப்பகுதிக் குள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக் கது.

(ம-30

மட்டக்களப்பில் கடந்தாண்டு 162 சிசு மரணங்கள்!

மட்டக்களப்பு போதனா மருத்துவ மனையில் அண்மைக்காலமாக சிசு உயிரிழப்புகள் அதிகரித்து வரு வதாக மருத்துவமனைப் புள்ளி விவ ரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 5 ஆண்டுகளில் பெறப் பட்ட விவரங்களின் அடிப்படையி லேயே இந்தத் தகவல் பெறப்பட்டுள் ளது. கடந்த 5 ஆண்டுகளில் மட் டும் 576 சிசுக்கள் இந்த மருத்துவ மனையில் உயிரிழந்துள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட் டும் 320 சிசுக்கள் உயிரிழந்துள்ளன.

கடந்த ஆண்டில் 162 சிசுக்கள் உயிரிழந்தன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கடந்த ஆண்டிலேயே அதிக குழந்தைகள் மட்டக்களப்பு மருத்[illegible]னையில் உயிரிழந்துள்ளன.

(ஒ-9)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

04.02.2004

HAPPY BIRTHDAY

மாதனை பருத்தித்துறையைச் சேர்ந்த
தவச்செல்வம் - கௌரி தம்பதியினரின் செல்வப் புதல்வன்

கௌசன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (04.02.2004) புதன்கிழமை மாதனை, பருத்தித்துறையில் உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பாமார், அம்மம்மாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், பட்டி, ஆசைமாமா, சித்தப்பாமார், அத்தைமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் மாதனைக் காளி அம்மன் துணைகொண்டு பல்கலையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

பாடசாலை வீதி, மாதனை,
பருத்தித்துறை. (ராஜகௌரி கிரீம் ஹவுஸ்).

தவச்செல்வம்-கௌரி
தம்பதியினர்.

(27720)(34-14-16-26)

புதுக் கட்டடத் திறப்பு விழா அழைப்பு

நிகழும் சர்வமங்களமிகு சுபானு வருஷம் தைமாதம் 21ஆம்நாள்
இன்று (04.02.2004) புதன்கிழமை
காலை 7.18 - 8.51 மணி வரையுள்ள சுபவேளையில்

சிவமணிராஜ் பி(B)ல்டிங்

என்னும் நிலையத்தை புதிதாக ஆரம்பிக்க இறையருள் கைகூடியுள்ளது.
அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடிநிற்கும்:

சிவமணிராஜ் பி(B)ல்டிங்
உரும்பிராய் சந்தி.
உரும்பிராய்.
T.P.- 021 4590310
06021 2556

செ.சிவக்கொழுந்து மனைவி:கனகமணி,
மகன்:ரவிவரதராஜ், மருமகள்: நிறைஞ்சனா,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

(27985)(12-11)

விற்பனைக்கு

மேடை, சீன்ஸ், மேக்கப் பொருள்கள், ஒலி அமைப்பு, ஒளி அமைப்பு உபகரணங்கள் டீசல் இஞ்சின் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
முத்துராஜா புரடக்ஷன்ஸ்
பிள்ளையார் கோயில் வீதி.
தும்பளை. பருத்தித்துறை.

(27917)(30-14-16-26)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆதீஸ் வெதுப்பகம்
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (27990) (12- 11)

5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2003 இல் பாடசாலை மட்டத்தில் அதி உயர் புள்ளியைப் பெற்று (141 புள்ளிகள்) சித்தியடைந்த எமது ஏகபுத்திரி

செல்வி சிறீகாந்தன் ஆராதனா

அவர்களையும் கல்வியறிவூட்டி ஆக்கமும் ஊக்கமும் அளித்த யா/கரணவாய் வேதாரணியேஸ் வரவித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும் மற்றும் நவின்டில் கேம்பிறிஜ் கலாசாலை நீர்வாகி, ஆசிரியர்களையும் மற்றும் கல்வியிற் கல்லூரி மாணவியான வீரப்பதிராயனைச் சேர்ந்த நா.நயனாவையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

விநாயகர் துணை

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தைமாதம் 23ஆம் நாள்
(06. 02. 2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 9. 35 மணிமுதல் 11. 00 மணிவரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி நடராஜசுந்தரம்
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன்
பிரசன்னா
அவர்களுக்கும்

கோவிந்த சாமியின் பேர்த்தியும்
திரு. திருமதி வசந்தன் தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வி
கலைச்செல்வி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் மாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரை நாடும்:

திரு.திருமதி நடராஜசுந்தரம் (தவில்)
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

திரு.திருமதி வசந்தகுமார் (நாதஸ்வரம்)
இணுவில்
கந்தசுவாமி கோயிலடி.

(இரு வீட்டார் அழைப்பு)

(27869)(35-26-14-18)

சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தைத் திங்கள் 24ஆம் நாள் சனிக்கிழமை (07. 02. 2004) நண்பகல் 12. 30 மணிமுதல் பிற்பகல் 2. 25மணிவரையுள்ள மக நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும், இடப லக்கினமும் கூடிய சுபயோக சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏகபுத்திரன்
திருநிறைசெல்வன்
அரவிந்தன்
அவர்களுக்கும்

எமது சிரேஷ்டபுத்திரி
திருநிறைசெல்வி
தமயந்தி
அவர்களுக்கும்

அருள்மிகு வல்வை வைத்தீஸ்வரப் பெருமானின் ஆசியுடனும், வல்வை முத்துமாரி அம்பாள் ஆசியுடனும் **திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தில்,** திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து சுபமங்களா திருமணமண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி பொ.சந்திரதாஸ்
(தபாலதிபர்)
வாவினி வீதி,
வல்வெட்டித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி க.தாமோதரம்
இல.53A, யாட்அப்ரோச் வீதி,
திருகோணமலை.

★ 12. 02. 2004 வியாழக்கிழமை மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(27546)(35-14-16-26)

வடமராட்சிக் கம்பன் கழகம் நடத்தும் சேக்கிழார் விழா

முன்றாம் நாள் நிகழ்வு

இன்று (04.02.2004) புதன் காலை 9.00 மணி (பழைய நேரம்)
இடம்: உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
தலைமையுரை: திரு.K.நடராசா
(அதிபர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

கருத்தரங்கம்

தலைவர்: மனோன்மணி சண்முகதாஸ்
ஒரு பாடல்: "கற்பனை கடந்தசோதி...."
- அரங்க இராமலிங்கம்
ஒரு வரி: "சைவநன்னெறி தாள் தழைத்து ஓங்க...."
- சிவ.மகாலிங்கம்
ஒரு சொற்தொடர்: "இறவாத இன்ப அன்பு...."
- இரா.செல்வவடிவேல்
ஒரு சொல்: "நோக்கி...."
- இ.ஜெயராஜ்

நிறைவு நாள் நிகழ்வு

இன்று மாலை (04.02.2004) புதன் மாலை 4.30 மணி
(பழைய நேரம்)
இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம்
மங்கல இசை: "நாதகங்கை" L.S.ஜெயநாதன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல் : திரு.பாலசிங்கம்
(செயலாளர், நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் கோயில்)
திரு.வை.கந்தசாமி
இறைவணக்கம்: திரு.ஆ.சிவநாதன்
வரவேற்புரை: ★ ★ ★
தலைமையுரை: திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
தொடக்கவுரை: கல்வயல் வே.குமாரசாமி

வழக்காடு மன்றம்

நீதிபதிகள்:
பேராசிரியர் அ.சண்முகதாஸ்
கம்பகாவலர்: க.சிவராமலிங்கம்
வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்
வழக்கு:
பெரியபுராணத்தில் சமுதாய உணர்ச்சியை விடவும்
பக்தியுணர்ச்சியை சேக்கிழார் முதன்மைப் படுத்துவது குற்றம்

தொடுப்போர்:
அரங்க இராமலிங்கம்
இரா.செல்வவடிவேல்

மறுப்போர்:
இ.ஜெயராஜ்
ஐ.கதிர்காமசேகரம்

(C/33043) (26-14-16) - வடமராட்சிக் கம்பன் கழகத்தினர்.

"கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம்"

வல்வை ஆலய கும்பாபிஷேக நிகழ்வு அஞ்சல்

வல்வெட்டித்துறை சிவன் ஆலயத்தில் இன்று நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்ப்பாணம் பண்பலை சேவை ஆகிய அலை வரிசைகளில் நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 7.00மணி தொடக்கம் 8.51நிமிடம் வரையுள்ள சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேககிரியைகளில் சர்வசாதகாசிரியர்களாக கலந்துகொள்ளும் பொருட்டு மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் பிரதமகுரு ஜி. ஸ்ரீனிவாசசாஸ்திரிகளும், அவரது சீடர்களும் விசேடமாக வருகை தந்துள்ளனர்.(எ-152)

மீண்டும் கோப்பாயில் பற்சிகிச்சை

கோப்பாய்,பெப்.4

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனையில் கடந்த சில வாரங்களாகத் தடைப்பட்டிருந்த பற்சிகிச்சை தற்போது வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையின் பல் மருத்துவர் விடுமுறையில் சென்றிருப்பதால் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஒ-72)

விவசாய ஓய்வூதிய உறுப்புரிமை புதுப்பிக்க மார்ச் வரை அவகாசம்

தவணைப் பணம் தொடர்ந்து கட்டாததன் காரணமாக விவசாய ஓய்வூதியத் திட்ட அங்கத்துவ உரிமையை இழந்த விவசாயிகள் பலரின் வேண்டுகோளுக்கு அமைய உரியவர்கள் தனது அங்கத்துவத்தைப் புதுப்பிக்கக் கமத்தொழில் காப்புறுதிச் சபை கால அவகாசம் ஒன்றை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் பிரகாரம் பயனாளிகள் தமது அங்கத்துவப் புத்தகத்துடன் இதுவரை செலுத்தாமல் நிலுவையாக உள்ள பணம் முழுவதையும் ஒரேதடவையில் உரிய கமத்தொழில் சேவை நிலையங்களிலோ, மாவட்ட கமத்தொழில் காரியாலயங்களிலோ அல்லது மாவட்டக் காப்புறுதிக் காரியாலயங்களிலோ எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்குமுன் செலுத்துவதன் மூலம் தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக்கொள்ளலாம் எனக் கமத்தொழில் காப்புறுதிச் சபைத தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-70)

அதிபர் நியமனம்

தெல்லிப்பழை,பெப்.4

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திற்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். அதிபராகப் பொறுப்புவகித்தவரான எஸ்.மகேஸ்வரன் சமீபத்தில் ஓய்வு பெற்றார். இதைத் தொடர்ந்து அதிபர் தரம் 2I ஐச் சேர்ந்த கே.இராசநாயகம் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-150)

வெளிநாட்டு வலைகளின் விற்பனையால் வடகடல் நிறுவன வலை விற்பனை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.4

வெளிநாட்டு வலைகளின் விற்பனையினால் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் வலையின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதென குருநகர் வடகடல் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது விடயமாக, அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருநகரில் உள்ள வடகடல் நிறுனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற வலைகளின் விற்பனை கடந்த ஆண்டு வெகுவாக குறைந்துள்ளது.

குடாநாட்டில் வெளிநாட்டு வலைகள் அதிகளவில் விற்பனையாவதால் வடகடல் நிறுவனத்தின் வலைகளை கடற்றொழிலாளர்கள் வாங்குவதில்லை.

கடந்த ஆண்டு 52 லட்சம் ரூபாவுக்கு மட்டுமே வலைகள் விற்பனையாகியுள்ளன. இது ஒரு கோடி ரூபாவாக இருந்திருக்க வேண்டும்.

வருட ஆரம்பத்தில்தான் வலைகள் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. எனினும், இவ்வருட ஆரம்பத்தில் எதுவித விற்பனையும் இடம்பெறவில்லை. இதனால், வடகடல் நிறுவனத்திற்குப் பாரிய நஷ்டம் ஏற்படும் நிலைகாணப்படுகிறது - என்றார் அவர். (எ-8-7)

பாம்புகளுக்கும் கால்கள் உண்டா?



அநுராதபுரம்பெப்4

பாம்புக்குக் கால்கள் இல்லைத்தான். ஆனால் அநுராதபுரத்தைச் சேர்ந்த கிராமவாசி ஒருவர் அண்மையில் கால்கள் உள்ள பாம்பொன்றுடன் அநுராதபுரம் மருத்துவமனைக்கு வந்தார். ஆனால் அப்போது பாம்பு உயிருடன் இருக்கவில்லை.

அந்தப் பாம்பு தலையணைக்குக் கீழ் இருந்து தன்னைத் தீண்டியதாக பாம்புடன் வந்தவர் அநுராதபுர மருத்துவமனையைச் சேர்ந்த விஷக்கடி மருத்துவ நிபுணர் டாக்டர் எச். ஆரியசேனாவிடம் தெரிவித்தார்.

அந்தப் பாம்பின் உடலின் மத்தியில் இடதுபுறத்தில் பல்லியின் காலை ஒத்த இருகால்கள் காணப்பட்டன. அதேபோன்று அந்தப் பாம்பின் வலது பக்கத்திலும் இரு கால்கள் இருந்தன என்றும் --

அந்தப் பாம்பை அடித்துக் கொன்றபோது வலதுபக்கத்திலிருந்த கால்கள் சிதைவடைந்துவிட்டன என்றும்- அந்தக் கிராமவாசி டாக்டரிடம் தெரிவித்தார். (எ)

நடேஸ்வராக் கல்லூரியைத் தனித்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

வயலும்,கடல்வளமும் சேர்க்கும் இயற்கை எழில் நிறைந்த பிரதேசம் காங்கேசன்துறை. இம்மண் பெற்ற புதல்வர்கள் நிறைந்த புலமையுடையவர்கள். இவர்களின் புலமைக்கு பால் சுரந்து ஈந்த அன்னையாக நடேஸ்வராக் கல்லூரி என்ற தாய் அடிநாதமாகக் காணப்பட்டாள். இவர்களுக்குப் பின்னால் கல்லூரியிலே ஒரு பேரறிஞர் குழுவும் திகழ்ந்தது.

தையிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுக உடையார் என்பவரால் கல்லூரி வீதிக்கு அருகில் உள்ள நரசிங்க வைரவர் ஆலயத்துக்கு அருகில் ஆங்கில சுதேச மொழிப்பாடசாலை என்னும் பெயருடன் 1901 ஆம் ஆண்டு ஒரு பாடசாலை உருவாக்கப்பட்டது. இப்பாடசாலைக்கு அருகே க.தம்பிப்பிள்ளை அவர்களால் கால்கோள் இடப்பட்டு சைவத்தமிழ் வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலை உருவாக்கப்பட்டது.

பின்னர் ஆங்கிலப் பாடசாலையை இயக்கமுடியாத நிலை ஏற்றபட்டதையடுத்து இரு பாடசாலைகளும் ஒரே நிர்வாகத்தின் கீழ் உள்ளீர்க்கப்பட்டு சைவத்தமிழ் வித்தியாலயம், ஆரம்ப ஆங்கில பாடசாலை என இரு பாடசாலைகள் இயங்கின. பின்பு 1945 ஆம் ஆண்டு ஆங்கிலப் பாடசாலை நடேஸ்வராக் கல்லூரி எனப்பெயர் மாற்றம் பெற்று கல்லூரியாகத் தர முயர்த்தப்பட்டது. 01.09.1957 இல் ஒரு முதல்தரக் கல்லூரியாக (1.ஏ.பி பாடசாலையாக) உயர்வு பெற்றது. 1962 ஆம் ஆண்டு இப்பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்டது.

இக்கல்லூரியில் ஜி.சீ.ஈ உயர் தரத்தில் ஆரம்பத்தில் கணித, விஞ்ஞானப்பிரிவு மட்டுமே காணப்பட்டது. பின்னர் கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு 1200 மாணவர்களுடன் பெருவிருட்சமாக வளர்ந்துகொண்டிருந்த ஆலமரம் 1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இடம்பெயர்வால் மெல்ல மெல்ல சரியத்தொடங்கியது. 1990ஆம் ஆண்டு இக்கல்லூரி காங்கேசன்துறையிலிருந்து இடம்பெயர்ந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கி வந்தது. ஆரம்பத்தில் மாலை நேரப் பாடசாலையாகவும் பின்னர் பகல் நேரப் பாடசாலையாகவும் 800 மாணவர்களைத் தன்னகத்தே கொண்டு இப் பாடசாலை இயங்கிவந்தது.

பின்னர் 1995 இல் இடம்பெயர்வின் போது இணுவில் சிவகாமி அம்மன் கோவிலுக்கு முன்னால் உள்ள மடத்திலும், தென்மராட்சியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் இயங்கிய இந்தப்பாடசாலை பின்பு 1996ஆம் ஆண்டு மீண்டும் பழையபடி சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் இயங்கத்தொடங்கியது.

1995ஆம் ஆண்டு நடைபெற்ற இடம்பெயர்வுக்குப் பின்னர் கல்லூரியின் மாணவர்தொகை 85. ஜி.சீ.ஈ உயர் தர வகுப்பில் 12 மாணவர்கள் மட்டும் கல்வி கற்றனர். இரு ஆசிரியர்கள் கடமையிலிருந்தனர் அந்த ஆசிரியர்களும் மாணவர்களும் தற்காலிகமாக ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டதுடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர்களின் கற்பித்தலின் கீழ் கற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், இவர்களது பதிவுகள் அனைத்தும் நடேஸ்வராக் கல்லூரியின் தலைமைத்துவத்தின் கீழ் இருந்தன.

கல்லூரியின் நிலை இவ்வாறானதாக அமைந்தாலும் மாணவர்கள் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதைப் பல சாதனைகள் மூலம் நிலைநாட்டி வந்தனர். 1996ஆம் ஆண்டு 12 மாணவர்கள் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றினர். இவர்களில் 6 பேர் பல்கலைக்கழக அனுமதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, மேற்படி பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களில் ப.கஜேந்திரன் என்ற மாணவன் வர்த்தகப்பிரிவில் 4 பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப்பெற்றிருந்தார். இந்தப்பெறுபேறு வலிகாமம் கல்வி வலயத்தில் முதன்மையானதாக அமைந்தது.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் சிறந்து விளங்கிய இந்தக்கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததை அடுத்தும், ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்றதை அடுத்தும் தற்போது கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் அறிவுக்கண்ணைத் திறந்த ஒரு பாடசாலையை ஆக்குவது எவ்வளவு கடினம். அதுவும் முதலாம் தரப்பாடசாலை ஒன்றை மூடுவதற்கான முதல்கட்ட நடவடிக்கையாகவே இதனைக்கொள்ள வேண்டியுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்டதரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தெல்லியூர் சி.ஹரிகரன்
நிர்வாக சபை உறுப்பினர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். நடேஸ்வராக் கல்லூரி.

பொது நிகழ்வுகள்

அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கைவினைப் பொருள்களின் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படம் இது. நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் தம்பதியர் மற்றும் விருந்தினர், மாணவர்களைப் படத்தில் காணலாம்.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட முறைசாராப் பயிற்சி நெறியில் இணைந்து கற்கை நெறியைப்பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்றது. சான்றிதழ் பெற்றவர்களையும் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மற்றும் அதிகாரிகளைப் படத்தில் காணலாம். (எ)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலையைச் சேர்ந்த வறுமைக்கு கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினர். இதன் போது எடுக்கப்பட்ட படம் இது. (எ)

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சமூகமட்ட தலைவர்களுக்கான ஆற்றல் மேம்படுத்தல் பயிற்சி நெறியினை யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் யங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பிரதேச செயலர் செ.சிறீனிவாசன், பயிற்சி இணைப்பாளர் வி.சொக்கநாதன், சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ. சரவணபவ, சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி அதிபர் மு.நாகேந்திரராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்: தென்மராட்சி செய்தியாளர்)*

உ
முருகன் துணை

இணுவில் கந்தசுவாமி கோயில்
தைப்பூசம் - மஞ்சத் திருவிழா

காலம்: தை மாதம் 22 ஆம் நாள் 2004-02-05 வியாழக்கிழமை
பகல்: 1008 சங்காபிஷேகம்
பகல்: 12.00 மணி விசேடபூசை
மாலை: 6.00 மணி சண்முகர் அர்ச்சனை
மாலை: 7.00 மணி சண்முகப்பெருமான், வள்ளி, தெய்வயானை சமேதரராக திருமஞ்சத்தில் வீதியுலா வருவார்.

அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு முருகன் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இணுவில்.
(27968)(34-14-18-26)

உபயகாரர்களும்,
தர்மகர்த்தா சபையும்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 04 1926

மறைவு 05 01 2004

திருமதி **லூத்தம்மா வலத்தீஸ்** (கிளி)

ஆறவில்லை எம்மனது மாதம் ஒன்றானதே
தேறவில்லை எம்மனது தேற்றுகின்றோம்
தேடுகின்றோம் நாம் கிடைக்கவில்லை
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு ~ ஆனால்
அம்மா என்ற சொல்லுக்கு யாருமில்லை!
எங்கள் அம்மாவின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்ரனி ரமிலா,
கோயில் வீதி,
மல்லாகம்.

- குடும்பத்தினர்.

(27633)(30-14-16-26)

நாய்க் கடிக்கு தடுப்பூசி ஏற்றத் தவறிய சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம்,பெப்.4

கடந்த இருமாதங்களுக்கு முன் னர்விசர்நாய்க்கடிக்குள்ளாகி ஏ.ஆர். வி. தடுப்பூசி மருந்தை ஏற்றத் தவ றிய சிறுவன் உயிரிழந்தான்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த மயில்வாகனம் சிவான்சன் (வயது 14) என்ற சிறுவனே மரணமானவனா வான்.

கடந்த மாதம் 29ஆம் திகதி திடீரென ஏற்பட்ட காய்ச்சல், மூச்சுத் திணறல் என்பவற்றை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன், நான்கு நாள்களின் பின் கடந்த திங்கட் கிழமை அதிகாலை அங்கு மரணமா னான்.

இச்சிறுவனுக்குக் கடித்த அதே தினத்தில் அந்த விசர்நாய் அவனது தகப்பனுக்கும் கடித்தது எனவும்-

அவரும் இந்தத் தடுப்பூசி மருந்தை ஏற்றவில்லை எனவும் - தெரிவிக் கப்பட்டது.

இவ்விடயம் டாக்டரிடம் தெரிவிக் கப்பட்டதையடுத்து அவரின் அறி வுறுத்தலுக்கமைய தகப்பனுக்கு தடுப் பூசி ஏற்றப்பட்டுள்ளது.

(ம-8-15)

கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் வவுனியாவில் கைது!

வவுனியா,பெப்.4

வவுனியாவில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் களவுகளுடன் தொடர்பு டைய சந்தேகநபர்கள் சிலர் பொலீஸா ரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலஸார் தெரிவித்துள்ள னர்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட் படுத்தப்பட்டு பல தகவல்கள் பெறப் பட்டுள்ளதாகவும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும் பாலானவர்கள் இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், களவாடிய பெரும்பாலான நகைகள் வங்கிகளில் அடைவு வைக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

(8-164)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன்**
(ஓய்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர்)

தாயின்மடியில் உதயம் 30-12-1941
இறைவன் அடியில் ஒன்றல் 06-02-2001

அன்பும் பாசமும் பொழிந்து
எம்மை வழிகாட்டிய குலவிளக்கே!
இன்றொடு மூன்றாண்டுகள் கடந்திடினும்
உங்கள் நினைவுகள் என்றுமே
எம் நெஞ்சைவிட்டு அகலாது!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

14, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மைத்துனிகள்.

(27973)(34-14-18-26)

அமெரிக்கா, கனடாவில் கல்வியைத் தொடருங்கள்!



75% வரை சேமியுங்கள்

இலவசக் கருத்தரங்கு

காலம். 08–02–2004, 10.30 மணிக்கு. இடம். St. John's College Jaffna

க. பொ.த. (சா/த, உ/த) த்தினைத் தொடர்ந்து உடனடியாக
ஒரு அமெரிக்கப் பல்கலைக்கழக பட்டப் படிப்பினைத் தொடருங்கள்.

6,00,000 இற்கு மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் தற்பொழுது வருடாந்தம் அமெரிக்காவில் தங்களது உயர் கல்வியினைக் கற்றுவருகின்றார்கள். இதில் 30,000 மாணவர்கள் ஐக்கிய இராச்சியம் UK மற்றும் அவுஸ்திரேலியா நாட்டினைச் சேர்ந்தவர்கள். இதன் மூலமாக அமெரிக்கா, உலகின் பல்கலைக்கழக உயர் கல்வியில் முதலாமிடத்தில் திகழ்கிறது.

- *Source*- Newsweek

★30 வருடத்திற்கும் மேலாக உலகின் பல பாகங்களிலும் தனது அறிவுரைகளை வழங்கிவரும் Mr. Dan Kelch (Dean - Northwood University) ஐ சந்தித்து உங்களது சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளலாம்.
★அமரிக்க உயர்கல்விக்குத்தேவையான விசேட நிதி உதவிகள் பெறுவதற்கான அறிவுரைகள் வழங்கப்படும்.
★ மற்றும், அமெரிக்காவில் உள்ள சுமார் 4000 அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு Admision / Acadamic Transfer க்கான வாய்ப்பு.

ANC பிரதிநிதிகளை நீங்கள் பெப்ரவரி 5, 6, 7 ஆம் திகதிகளில் (காலை 9.00 - 4.30 மாலை) யாழ்/ பஸ்ரியன் ஹோட்டலில் சந்திக்கலாம். (தொ.பே. 0777 712 059)
மற்றும் ஏற்கனவே எம்மை கடிதம் மூலம் தொடர்பு கொண்ட மாணவர்கள் அனைவரும் நேரடியாக எம்மை வந்து சந்திக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

AMERICAN NATIONAL COLLEGE
A Member of Ceylinco Consolidated
No. 308, 310, R.A.De. Mel Mw,
Colombo - 03.
Tel No. 4 514 415
Hotline. 0777 484 484, 0777 712 059.
E-mail. lfthikar@ancedu.com

மதுபானம் எப்போதுமே—— உடல் நலத்துக்குத் தீங்கானது

"Alcohol not goog for Health" என்ற (மதுபானம் உடல் நலத்திற்கு உகந்ததல்ல) என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி டி.பி.அத்துக் கொரல்ல எழுதி 17.01.2004 தி ஐலன்ட் பத்திரி கையில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் சாராம்சம் இங்கே தமிழ் வடிவத்தில் தரப் படுகின்றது.

"குடி குடியைக் கெடுக்கும்" என்றொரு பழமொழி தமிழ்மொழியில் உண்டு. மதுபானத்திற்கு அடிமையாகி தமது சொத்தை, சொந்தங்களை ஏன் உயிரையே இழந்த பலரை எமது வாழ்வில் பார்த்திருக்கின்றோம். பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இவர்களைத் திருத்தவேமுடியாதா? என்ற ஆதங்கம் எம்மில் பலருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடும். இன்னும் சிலர் அதற்கான பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுத் தோல்வியைத் தழுவியிருக்கக்கூடும்.

எத்தனை கோடி அறிவுரைகள் சொன்னாலும் இவன் திருந்துகின்றான் இல்லையே என அங்கலாய்க்கும் அநேக தாய்மாரை, மனைவிமாரை, சகோதர சகோதரிகளை எம் கண் முன்னால் காண்கின்றோம். (எத்தனை அறிவுரைகள் சொன்னாலும், இவள் திருந்துகின்றாள் இல்லையே என்ற நிலை இன்னும் இங்கே வரவில்லை என்று நம்புவோமாக - இது மேல் நாடுகளில் சகஜம்) பின்வரும் தொகுப்பு குடிமக்களுக்கானது இதைப் படித்த பின்னராவது அவர்கள் குடிப்பதைச் குறைக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்போமாக.

"மதுபானம் உனது உடலுக்குக் கேடு விளைவிக்கும்" இப்படிச் சொல்பவர் சாதாரணமானவர் இல்லை. உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதுபானம் தொடர்பான சிகிச்சைப்பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர் மரியோ ஆர்.கொன்டோனாதான்.

நான் அதிகம் குடிப்பதில்லை சிறிதளவே குடிக்கின்றேன் எனவே எனக்கு பாதிப்பு இல்லை, என்று சொல்பவர்களுக்கு, உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதுபானம் தொடர்பான திட்டத்தின் பணிப்பாளர் ஹன்ஸ் எம்ப்லட் அறிவுரை கூறுகையில், ஆபத்தில்லாமல் உட்கொள்ளக்கூடிய மிகக் குறைந்தளவிலான மதுசாரத்தின் (Alcohol) அளவு இவ்வளவுதான் என்று நிர்ணயிக்க முடியாது. இக்கருத்தைச் (சிறுகுடி) மக்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முதல் நாள் குடித்த அளவிற்குச் சிறிது அதிகமாக அடுத்தநாள் மதுபானம் அருந்தும் பழக்கத்தைக் கைக்கொள்வதால், இதயம் தொடர்பான நோய்கள் உண்டாகும் வாய்ப்புக்கள் குறைவு என்ற ஒருகருத்தும் உள்ளது. ஆனால், இதற்குப் போதிய ஆதாரம் இல்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. ஆகவே நோயைக் காரணம் காட்டி மதுக்கிண்ணத்தை ஏந்தலாம் என்று நினைப்பவர்கள் அவ்வெண்ணத்திற்கு விடை கொடுக்க வேண்டியதுதான்.

மதுபானத்தினுள் ஒளிந்திருக்கும் மதுசாரம் (Alcohol) விஷத்தன்மையுடைய ஆபத்தான ஒரு மூலப்பொருள். அதை உட்கொள்பவர்களை அது அடிமைப்படுத்திவிடும், என்று வைத்தியகலாநிதி ஆர்.கொன்டோனா (குடி) மக்களுக்குப் புத்திசொல்கின்றார்.

ஐந்து அல்லது அதற்கு மேல் என்ற அளவில் மதுபானத்தை அளவுக்கு மீறிக் குடிப்பவர்களைப் (இல்லையில்லை மதுபானத்தில் குளிப்பவர்களை) "பெரும்குடிமகன்" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கலாம். ஐரோப்பாவில் 15-29 வயதிற்கிடைப்பட்ட இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் 4 மரணங்களில் ஒன்று அவ்விளைஞர்கள் "பெரும்குடிமகன்கள்" ஆனதின் விளைவால் ஏற்பட்டவையே யென உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிறைவேற்று இயக்குநர் வைத்தியகலாநிதி குறோஹறாலம் பிறன்ட்லாண்ட் கவலை தெரிவிக்கின்றார்.

ஐரோப்பாவிலுள்ள பாடசாலைகளில் 1999இல் மேற்கொள்ளப்பட்ட மதுபானம் மற்றும் ஏனைய போதைப் பொருள்கள் தொடர்பான அறிக்கை, உலகசுகாதார ஸ்தாபனத்தின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. 1994-1998 இற்கு இடைப்பட்ட 4வருடகாலத்தில் மதுபானம் மற்றும் ஏனைய சட்டவிரோதமான போதைப்பொருள்களின் பாவனை கணிசமான அளவிற்கு அதிகரித்திருப்பதாக, அதிர்ச்சியூட்டும் தகவலை அவ்வறிக்கை வெளியிட்டது.

செக்குடியரசு, டென்மார்க், அயலர்லாந்து, மால்டா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த "டீன்ஏஜ்" வயதினர் (13-19) பிஞ்சிலே பழுத்த பழங்களாகி விட்டார்கள்.

இந்தவயதிலேயே தங்களுக்குக் (குடி) மக்கள் அந்தஸ்து வேண்டுமென்கிறார்கள். அதிலும் டென்மார்க்கைச் சேர்ந்த "டீன்ஏஜ்" வயதினரோ தங்களுக்குப் (பெரும்குடி) மக்கள் அந்தஸ்து வேண்டும் என்று அடம்பிடிக்கின்றார்கள். அங்கே 59 வீதமான "டீன்ஏஜ்" வயதினர் குறைந்தது 40 தடவைகளாவது மதுபானம் அருந்திவிட்டுப் போதையில் மிதந்திருக்கின்றார்கள். பெண்களைவிட ஆண்களே அதிகம் மதுபானம் அருந்துவதாகத் தெரியவருகின்றது.

நல்லவேளையாக இந்தவிடயத்திலும் பெண்கள் தமக்குச் சமத்துவம் வேண்டுமென்று கேட்கவில்லை.

(பெரும்குடி) மக்களின் அட்டகாசம் டென்மார்க், போலந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளில் மிக அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஏனைய நல்லவிடயங்களில் பெரியவர்களை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய "டீன்ஏஜ்" வயதினர், அவ்வாறில்லாமல் தண்ணி அடிக்கும் ஸ்டைலில்" மட்டும் பெரியவர்களைப் பின்பற்ற விரும்புகின்றார்கள் என்று வைத்தியகலாநிதி ஹைபெல் அங்கலாய்க்கிறார்.

இலங்கையில், மதுபானம் அருந்துவதால் உடல், உளம் மற்றும் சமூக ரீதியாகப் பல்வேறு தாக்கங்கள் ஏற்படுகின்றன.

பிரிட்டனைச் சேர்ந்த (குடி)மக்கள் புதிய சாதனையொன்றைப் படைத்துள்ளார்கள். அது வேறொன்றுமல்ல, 1950 - 1980இற்கு இடைப்பட்ட 30 வருடகாலத்தில், மதுபானத்தின் பாவனையை இருமடங்காக்கியதன் மூலம் அச்சாதனையைப் புரிந்துள்ளார்கள். இவ்விடயத்தில், பிரிட்டனின் (குடி)மக்களுக்கு இலங்கையின் (குடி)மக்கள் ஈற்றும் சளைத்தவர்களல்லர். ஏனெனில் மதுபானத்தின் பாவனை பிரிட்டனை விட இலங்கையிலேயே அதிகமாகவிருக்கும் என்று நம்பப்படுகின்றது. ஏனைய போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்களிடையே இருப்பது போல், மதுவிற்கு அடிமையானவர்களையும் அவர்கள் உட்கொள்ளும் மதுபானத்தின் அளவைக் கொண்டு 4பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

(1) சமூக அந்தஸ்துக் கருதிக் குடிப்பவர்கள்

இவர்களைக் குடிப்பவர்கள் என்று கூறினால் கோபித்துக்கொள்வார்கள். ஆகவே நடைப்பவர்கள் என்று அழைப்போம் இவர்களுக்குச் (சிறுகுடி) மக்கள் என்ற கௌரவம் வழங்கலாம்.

பிரிட்டனின் மொத்தச்சனத்தொகையில் 10 வீதமானவர்களே மதுபானத்தை நாடாதவர்கள். அதனால் இவர்களுக்குக் (குடி) மக்கள் அந்தஸ்து வழங்கப்படவில்லை. ஏனைய 90வீதமானவர்களும் குடிகாரர்கள். எனவே இவர்களுக்குக் (குடி) மக்கள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

(2) தமது உடலுக்குத் தீங்குவிளைவிக்கும் அளவில் மதுபானம் அருந்துபவர்கள்

இவர்கள் இரண்டாம் வகையினர் அவர்களுக்குக் (குடி) மக்கள் என்ற சிறப்புப் பட்டம் வழங்கலாம். இதே அளவில் தொடர்ந்தும் மதுபானம் அருந்தி வந்தால் இவர்களின் உடல் ஆரோக்கியம் கடுமையாகப் பாதிக்கப்படும்.

(3) குழப்பம் விளைவிக்கும் அளவில் மது அருந்துபவர்கள்

இவர்கள் மூன்றாவது பிரிவினர். (பெரும் குடி) மக்கள் என்ற கௌரவம் வழங்கப்படாவிட்டால் இவர்கள் கோபித்துக்கொள்வார்கள். இவர்கள் உட்கொள்ளும் மதுவின் அளவால், இவர்கள் மட்டுமல்லாமல், இவர்களது குடும்பம் மற்றும் இவர்கள் சார்ந்த சமூகம் என்பனவும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன.

4) தமது செயற்பாடுகளுக்குப் பிறரது தயவு தேவைப்படும் இவர்கள் மதுவுக்கு அடிமையானவர்கள்

குடிமன்னர்களாகிய இவர்களை நாலாவது பிரிவில் அடக்கலாம். (மாபெரும் குடி)மக்கள் என்று இவர்களை அழைப்பதே சாலவும் பொருந்தும். இந்நிலையில் குறிப்பிட்ட கால அளவில் அல்லது நீடித்த கால அளவில் விஷத்தன்மை உண்டாகி விடும். கட்டுப்படுத்த முடியாத ஆவலினால், அருந்தும் மதுவின் அளவும் அதிகரித்துவிடுகின்றது. உடல் மற்றும் உளவில் ரீதியாக மற்றவர்களின் தயவில் தங்கியிருக்கவேண்டிய துரதிர்ஷ்ட நிலை இவர்களுக்கு ஏற்பட்டுவிடும். சமுதாயமும் ஏன் சொந்த பந்தங்களும் கூட இவர்களை வெறுத்தொதுக்கத் தலைப்படும்.

இந்நிலை வருதற்கு முன்னர் இவ்வாறானவர்கள் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ள முயற்சிப்பார்களா?

பிரிட்டனில் மட்டும் இவ்வாறு மதுவிற்கு அடிமையான 2லட்சம்(குடி) மகன்கள், (குடி)மகள்களும் இருக்கக்கூடும்; உலாவித் திரிகின்றார்கள். 1989இல் அமெரிக்காவில் 1 கோடியே 90லட்சம் மது அடிமைகள் இருந்ததாகக் கணக்கெடுப்பொன்று தெரிவித்துள்ளது.

மதுசாரம் (மதுபானம்)

தொடர்பான பிரச்சினைகள்

மதுபானம் உட்கொள்வது தொடர்பான பிரச்சினைகளால் வருடந்தோறும், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மாகாணங்களிலிருந்து 33ஆயிரம் பேர் அதிவிரைவிலேயே யமலோகத்தில் குடியேறிவிடுகிறார்கள் அதாவது சாதரணமாக ஒருவருக்கு இறப்பு ஏற்படும் வயதின் முன்னரே இறந்துவிடுகின்றார்கள். ஏற்படும் இம்மரணங்களில் முந்நூறு வரையானவை ஈரல் கருகியதால் சம்பவிப்பவை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனில் நிகழும் தற்கொலை மரணங்களில் 80 வீதமானவை மது அருந்தியதின் விளைவால் ஏற்படுகின்றன. இடம்பெறும் கொலைகளில் 30 வீதமானவை மது அருந்தியவர்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. தீ விபத்துக்களினால் ஏற்படும் இறப்புக்களில் 80 வீதமானவற்றிற்கு உபயம் (குடி)மக்களே.

இதுமட்டுமா? 40 வீதமான வீதி விபத்துகளுடன்(குடி)மக்கள் தொடர்புபடுத்தப்படுகிறார்கள். தண்ணீரில் மூழ்கி இறப்பவர்களில் 15 வீதமானவர்கள் மதுவில் மூழ்கியவர்களாக இனம் காணப்பட்டுள்ளார்கள். பின்வரும் சம்பவங்களுக்கு மது அருந்தியவர்கள் காரணமென அறியப்பட்டுள்ளது.

★ இடம்பெறும் 3 விவாகரத்துக்களில் 1 இற்கு.

★ இடம்பெறும் 3 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களில் 1 இற்கு.

★ மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுபவர்களில் 20-30 வீதமானவர்களிற்கு.

மதுபானம் உட்கொள்வதில் பின்வரும் காரணிகள் தாக்கத்தை ஏற்படுத்தும். இன்னும் விரிவாகச் சொன்னால் மது அருந்துவது, பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது -

பால் ரீதியாக

பெண்களுடன் ஒப்பிடுகையில், ஆண்களுக்கு மதுபானம் தொடர்புடைய பிரச்சினைகள் இரு மடங்காக உள்ளது.

தொழில் ரீதியாக

உணவு விடுதிகளில் பணியாற்றுவோர் மற்றும் மதுபானங்கள் காய்ச்சுதல் - வடித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுவோரில் பெரும்பாலானோர் இறுதியில் மதுவிற்கே அடிமையாகி விடுகின்றார்கள்.

இல்லிடம் இல்லாமை

வீடற்றவர்களில் மூன்றிலொரு பகுதியினர் மதுக் கிண்ணத்தை ஏந்தி விடுகின்றார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இனரீதியாக

சீனர்கள் மற்றும் ஜப்பானியர்களில் ஐந்திலொரு பங்கினர் விரும்பினாலும் கூட மதுபானத்தைத் தொட்டுக் கூடப் பார்க்கமுடியாது. மதுபானத்தின் செறிமானம் தொடர்பான ஈரலில் சுரக்கும் அசற்றல்டிகைட் டிகைட்ரோஜெனஸ் (Acetaldehydedehydrogenase) என்ற நொதியம் பரம்பரை ரீதியில் அவர்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதே இதற்கான காரணமாகவும். அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்தான்.

மது அருந்துபவர்களால், சமூக மருத்துவ மற்றும் உளவியல் ரீதியாக பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

சமூகரீதியான பிரச்சினைகள்

(குடி)மக்களின் அட்டகாசத்தால் பெரும்பாலும் சமூக ரீதியான பிரச்சினைகளே உருவாகின்றன.

★ மருத்துவ ரீதியான சான்றிதழ்கள் கேட்கப்படும் நிலை உருவாகி விடுன்றது.

★ விவாக சம்பந்தமான பிரச்சினைகள் விவாகரத்துகள் வரை சென்று விடுகின்றன.

மதுபானத்தில் மூழ்கி எழுந்ததன் விளைவால் (குடி)மக்கள் தமது வீரத்தை மற்றவர்களுக்கு காட்ட முயற்சிக்கும் போது ஊருக்குள் பல்வேறு கைகலப்புச் சம்பவங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

★ ஆட்டை விற்று, மாட்டை விற்று நகை நட்டுகளை விற்று கடைசியில் வீட்டையே விற்று தண்ணியடித்து

தமிழ் வடிவம் : மலர்

விட்டு நடு வீதியில் நிற்பதால் ஏற்படக்கூடிய நிதி நெருக்கடிகள், குடித்துக் கும்மாளமடித்துவிட்டு விடிய விடிய நித்திரை கொள்வதால் ஒழுங்காக வேலைக்குச் சமுகமளிக்கமுடியாமை மற்றும் தொழில் புரியும் இடங்களில் விபத்துக்கள் ஏற்படக் காரணமாக இருத்தல் அல்லது விபத்துக்களில் சிக்கிக்கொள்ளுதல்.

★ பொது இடங்களில் குடித்து விடடுக குழப்பம் விளைவித்தல் அல்லது சண்டித்தனம் செய்தல் உணவு விடுதிகளிலும் மற்றும் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளின் போதும் குடித்துவிட்டு அட்டகாசம் செய்தல்

★ மதுபானம் அருந்திவிட்டு வன்முறைகளைத் தூண்டும் விதமாக நடந்துகொள்ளுதல், குடித்து விட்டு கண் மண் தெரியாமல வாகனங்களைச் செலுத்துவதால் ஏற்படும் விபத்துக்களிற்குக் காரணமாக இருத்தல், பாலியல் ரீதியான வன்முறைகளில் ஈடுபடுதல் மற்றும் குடித்துவிட்டுத் தனது சொந்த வீட்டில் இருப்பதற்கு மனமின்றி தெருத்தெருவாக அலைந்து திரிதல். இது தேவையா?

மருத்துவ அறிக்கைகள்

மதுபானம் உட்கொள்வதால் உண்டாகும் உபாதைகளிற்குச் சிகிச்சை பெறும் நோயாளர்களில் 80 வீதமானவர்களுக்குக் கடுமையான மருத்துவக் குறைபாடுகள் இருப்பது தெரிய வந்துள்ளது.

மதுவிற்கு அடிமையானவர்கள், மது அருந்துவதை நிறுத்தமுயற்சிக்குமபோது, பல்வேறு பட்ட உடல் ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையேற்படும். சிக்கலான பல்வகைப்பட்ட உடல் ரீதியாக அறிகுறிகள் தோன்றும். அது பற்றி அடுத்த வாரம் பார்க்கலாம்.

★

இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் அளவுக்கதிகமாக மதுபானம் அருந்துவதால் விளையும் தீமைகள் பற்றியும் மதுவை மறக்க விரும்புபவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றியும் அனைவரும் ஓரளவுக்கேனும் அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தரப்பட்டுள்ளன. மது அருந்துவோர்களுக்கு உடலியல் ரீதியாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டாலோ அல்லது அவர்கள் மது குடிப்பதை நிறுத்த விரும்பினாலோ அவசியம் அது தொடர்பாக மருத்துவ நிபுணரை அணுகுவதே சிறந்த முறையாகும்.

உ

ஓம் சக்தி

அச்செழு – கொக்கிருந்தபதி ஸ்ரீகண்ணகை அம்பாள் என வழங்கும்

அருள்மிகு சிவகாமி அம்பாள் திருக்கோயில்

புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ

மஹாகும்பாபிஷேகச் சிறப்புமலர்

04.02.2004

ஆதீன முதல்வரின் அருளாசி

அச்செழு கொக்கிருந்தபதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அன்னை சிவகாமி அம்பாள் கும்பாபிஷேகம் இன்று சிறப்புற நிகழ்வது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. நாட்டின் யுத்த சூழலால் - பலகாலம் - பூஜை வழிபாடுகள் இன்றி பாதிப்புற்றிருந்த அம்பிகையின் ஆலயம் இன்று அப்பகுதி மக்களின் பெருமுயற்சியால் புதுப்பிக்கப்பட்டு - கும்பாபிஷேகம் நிகழ்வது இப்பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இக்கும்பாபிஷேக விழா - ஆலய பிரதமகுருவும் பிரதிஷ்டா குருவும் ஆக விளங்கும் சிவஸ்ரீ சிதம்பரநாதகிருஷ்ணசாமிக் குருக்களின் தலைமையில், இலங்கையின் தலைசிறந்த சிவாசாரியார்களால் வேத, ஆகம முறைப்படி நிகழ்வது மற்றும் ஒரு சிறப்பம்சமாகும்.

கும்பாபிஷேக விழாவின் சிறப்புமிக்க பலனால், ஆலயப் பரிபாலன சபையின், அச்செழு வாழ் சைவமக்கள் அம்பிகை அருள் பெறவும் இக்கிராமத்தைச் சேர்ந்த வெளிநாட்டு அன்பர்களுக்குத் - திருவருள் கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

பிரதிஷ்டா குருவின் நல்லாசி

யாழ்ப்பாணத்தில் - அச்செழு - கொக்கிருந்தபதியில் அச்செழு - வாழ் சைவ மக்களினதும் - எங்களினதும் குலதெய்வமாக மிளிரும் அன்னை சிவகாமி அம்பாளுக்கு இன்று புதன் காலை 7.18 மணி முதல் 8.57 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் - மஹாகும்பாபிஷேகம் தெய்வீக அருளால் நடைபெறுகிறது.

விநாயகர் பெருமான் - ஆலயத்துக்கு சரிநிகர்த்ததாக வலதுபுறத்தே அமைந்திருக்கும் அன்னையின் ஆலயம் ஆதியில் கண்ணகை அம்பாளின் சன்னியத்தியத்தில் அமைந்திருந்தது. தற்போது சிவகாமி அம்பாள் மூலாலயத்தில் கொலுவிருந்து அருள்பாலிக்க - விநாயகர், சிவன், கண்ணகை அம்பாள், நவக்கிரகதேவர், வைரவர், சந்தான கோபாலர், முருகன், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்தங்களுக்கு தனித்தனி ஆலயம் அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

புதிய விக்கிரகங்கள் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் சூழலால் மிகவும் பாதிப்புற்ற ஆலய சூழலில் இதுவரை இராணுவம் நிலைகொண்டு இருந்தது. இதனால் பூசைகள், திருப்பணிகள், வளர்ச்சிகள், தடைகள் ஏற்பட்டாலும் தன்னை வழிபாடு செய்துவந்த மக்களை அம்பாள் காத்து அருள் செய்துள்ளார்.

இந்த ஆலயத்தைக் கிராம மக்கள் ஒருங்கு சேர்ந்து ஆலய பரிபாலன சபையும் அமைவுசெய்து அனைத்து மக்களும் இணைந்து பல திருப்பணிகளை நிறைவுசெய்து இன்று மஹாகும்பாபிஷேகத்தை பெருவிழாவாகச் செய்து மகிழ்கின்றனர். அம்பாள் திருவருள் மிகுதியால் கும்பாபிஷேக பலனால் பக்தப் பெருமக்கள் எல்லாரும் - விவசாயம் தொழில், கல்வி அனைத்திலும் சிறப்படைந்து இன்பம் பெருக மகிழ்ச்சியோடும் நிம்மதியோடும் வாழ அன்னை சிவகாமி அம்பாள் அருள் கும்பாபிஷேக திருவருள் கிடைப்பதாக.

பிரதிஷ்டா பிரதமகுரு
கிரியாகலாபாமணி, ஆகம கலாசூரி வித்வஜோதி
சிவஞானபால்கரன் **சிவஸ்ரீ சிதம்பர கிருஷ்ணசாமிக் குருக்கள்**
(அச்செழு, புன்னாலைக்கட்டுவன்)

அரசமர நிழலிலிருந்து அருள்பரியும் அன்னை அருளை அள்ளிச் சொரியும் சிவகாமி அம்பாள்

இலங்கையைச் சிவபூமி என்கிறார் திருமூலர் (திருமந்திரம் 2747). பாடல்பெற்ற சிவத்தலங்கள் திருக்கேதீஸ்வரம், திருகோணலை ஆகிய இரண்டு - இங்கு அமைந்துள்ளன. இதைவிட கதிர்காமம், மாவை, சந்நிதி, நயினை போன்ற - ஏராளம் ஆலயங்கள் ஆங்காங்கே தெய்வீக பொலிவுடன் விளங்குகின்றன.

ஒவ்வொரு தலத்திற்கும் - ஒவ்வொரு தனிச்சிறப்பு.

அரசமர தலவிருட்ச சூழலில் - அச்செழு கொக்கிருந்தபதியில் அரசாட்சி செய்கிறாள் அன்னை சிவகாமி.

இன்று அன்னை சிவகாமியின் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நிகழ்வது வரலாற்றுப் புகழ்மிக்க கைங்கரியமாகும். அன்னையின் ஆலயம் இராணுவ முகாம் முற்றாக மறைத்து இருந்த பகுதியில் அமைந்திருந்தது.

இன்று மீண்டும் அம்பிகை அருளால் புதுப்பொலிவுடன் ஆலயம் அழகு, வர்ணம், பரிவார ஆலயங்கள் அமைவு செய்யப்பட்டு மிளிர்கின்றது. கும்பாபிஷேகம் நவகுண்டலங்களோடுகூட 7 யாகசாலைகள் அமைவு செய்யப்பட்டு, யாக பூஜை, ஹோமம் வழிபாடுகள் 3 தினங்கள் நிகழ்வு செய்யப்பட்டு - பல சிவாசாரியர்களின் வேத மந்திர ஒலியுடன் நிகழ்வுறுகின்றது. அம்பிகையின் கும்பாபிஷேகம் கண்ணாரக்கண்டு - மனதார அனுபவிப்பதே - பெரும்பேறு ஆகும்.

கும்பாபிஷேகத்தை நிறைவுசெய்யும் பிரதம குருக்கள், பிரதம ஆலய அர்ச்சகர்கள், ஆலய பரிபாலன சபையினர், சைவமக்கள் மற்றும் தொண்டர்கள், திருப்பணிக்கு பொன் பொருள் வாரி வழங்கிக்குவித்த பெருமக்கள் அனைவருக்கும் அம்பாளின் கும்பாபிஷேக பலன் நிறைவாகக் கிடைக்கவும் - அம்பாளைக் குலதெய்வமாக வழிபாடு செய்யும் மக்கள் எல்லோருக்கும், எல்லா நலன்களும் கிடைக்கவும் பேரருள் கிடைக்கவும் பிரார்த்திப்போமாக.

சர்வபோதகாசிரியர்
"சித்தாந்த கலாநிதி"
சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஜே.பி.
(புன்னாலைக்கட்டுவன்).

ஆலய பிரதம குருவின் ஆசி

மனித வாழ்க்கைக்கு அருள்நெறி துணையாக விளங்குகின்றது. அருள் எனும் உணர்வு மனதில் எழ ஆலய தரிசனம் இன்றியமையாதது. ஆலய வழிபாட்டுக்காக அச்செழு நகர் மக்கள் ஒன்றுகூடி ஆலயத்தை அமைத்து அங்கு மூல மூர்த்தியாக அன்னை ஸ்ரீ சிவகாமி அம்மன் பரிவார மூர்த்திகளான விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான், சந்தான கோபாலர், சிவன், அத்தோடு நவக்கிரகங்கள், வைரவர் வசந்த மண்டபம் சண்டேஸ்வரி ஆகிய ஆலயங்கள் தனித்தனியே அமைத்து இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. ஆகவே, அம்பிகையின் அருள் சகலருக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.

பிரம்மஸ்ரீ சிதம்பர கிருஸ்ணமூர்த்தி சர்மா

ஆலய பரிபாலன சபையின் செய்தி

அச்செழு கொக்கிருந்தபதி ஸ்ரீ கண்ணகை அம்மன் என வழங்கும் அருள்மிகு சிவகாமி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை புனர்பூச நட்சத்திர முகூர்த்த நன்னாளில் காலை 7 மணி 35 நிமிடம் தொடக்கம் 8 மணி 15 நிமிடம் வரையுள்ள காலத்தில் விமரிசையாக நடைபெறுகிறது.

பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ சிதம்பர கிருஷ்ணசாமி குருக்கள் அவர்களின் தலைமையின்கீழ் ஒன்பது சிவாசாரிகள் பங்குகொண்டு கும்பாபிஷேகம் மிகச் சிறப்பான முறையில் வேதபாராயணங்கள் முழங்க நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது. அருள்மிகு சிவகாமி அம்பாள், பரிவார மூர்த்திகள், சித்தி விநாயகர், சிவன் - சக்தி, முருகன், சந்தானகோபாலர், வயிரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள் என்பனவற்றுடன் மேலும் மூர்த்திகள் புதுப்பொலிவுடன் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மணிக்கூட்டுக்கோபுரமும் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றது.

இந்த ஆலயத்தை 1838 ஆம் ஆண்டு தொடக்கம் பூதத்தம்பியும் அவர் புத்திரர் மயில்வாகனமும் ஆதரித்து வந்தனர். அவர்களின் பின்னர் பிள்ளைகளும் பரம்பரையாக இன்றுவரை வழிநடத்தி வருகிறார்கள்.

முன்னர் ஸ்ரீ கண்ணகை அம்மன் என வழங்கி வந்தமையும் 1984 ஆம் ஆண்டு நடந்த மஹாகும்பாபிஷேக விழாவில் எழுந்தருளி விக்கிரகம் சிவகாமி அம்மனை வைத்து வந்தமையால் அருள்மிகு சிவகாமி அம்மன் என வழங்கி உற்சவங்கள் நடைபெற்று வந்தன.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் மஹோற்சவங்கள் கொடி ஏற்றத்துடன் நடைபெற அருள்பாலித்து வந்தமையும் 11 உற்சவங்கள் நடைபெற்று, ஆடிப்பூரத்தில் தீர்த்த உற்சவம் நிகழ ஒழுங்குகள் செய்யப்பட்டன. அம்பாளின் அனுக்கிரகம் அச்செழுவாழ் மக்களுக்கும் அயற் கிராம மக்களுக்கும் அடியார்களுக்கும் கிடைத்து வருவது தெள்ளிதிற் புலனாகின்றது. மேலும் இக்கிராம மக்களுக்கு சித்தி விநாயகர், அருள்மிகு சிவகாமி அம்மன், நரசிங்கவயிரவர், வீரபத்திரர் என்றும் தெய்வங்கள் அருள் புரிந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய கும்பாபிஷேக நன்னாளில் அடியார்கள் தெய்வ அனுக்கிரகங்கள் பெற்று வாழ்வதற்கு அம்பாளை வழிபட்டு இறைஞ்சுவோமாக!

அருள்மிகு சிவகாமி அம்மன் ஆலய பரிபாலன சபையினர்,
அச்செழு.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

சகல விதமான பொருள்களையும் இன்றே பெற்றிட நாடுங்கள்:
மாயவன் பல்பொருள் வாணிபம்
பிளாஸ்ரிக் பொருள்கள், பலசரக்குப் பொருள்கள், விவசாய உள்ளீடுகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
புத்தூர் வீதி, அச்செழு. உரிமையாளர்: வி.நந்தகோபன்

கட்டட நிர்மாணத்துறையின் இன்றைய முன்னோடிகள்:
முருகன் என்ரப்பிறைஸ்
அச்செழு, நீர்வேலி. முகாமையாளர்: க.பேராதரன்

பல்பொருள் விற்பனையில் இன்றைய வாடிக்கையாளர்களின் மனங்கவர்ந்த நிறுவனம்:
முகுந்தா றேடேர்ஸ் & முகுந்தா டிரான்ஸ்போட்
அச்செழு, நீர்வேலி. உரிமையாளர்: ச.முகுந்தன்

பால்மா வகைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள் அனைத்து வகைப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்:
நவநீதன் களஞ்சியம்
புத்தூர் வீதி, அச்செழு. உரிமையாளர்: ம.நவநீதன்

சகல விதமான பொருள்களையும் ஓரிடத்தில் பெற்றுக்கொள்ள நினைவில் வைத்திருங்கள்:
கண்ணன் களஞ்சியம்
தனிப்பனையடி, அச்செழு.

பிளாஸ்ரிக் வகைகள், தளபாட வகைகள், பலசரக்குப் பொருள்கள், உரவகைகள் என்பனவற்றின் மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்:
பவானி களஞ்சியம்
இராச வீதி, நீர்வேலி. உரிமையாளர்: பொ.கிருஸ்ணானந்தன்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்:
வினோ நகைப்பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2824, 5394

(சி-33085) (24)

உங்களது பழைய நகைகளைக் கொடுத்து உடனுக்குடன் புதுப்பொலிவுடன் திகழ அசல் 22 கரட் தங்க நகைகளுக்குத் தெரிவுசெய்ய இன்றே நாடுங்கள்:
சாரங்கா நகைமாடம்
இல. 177/4, 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2280, 5960

அன்பளிப்புப் பொருள்களுக்கும், அழகுசாதனப் பொருள்களுக்கும் இன்றே நாடுங்கள்:
பெஷன் ஹவுஸ்
65, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2197

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அதனையும் நடத்தத் திணைக்களம் தயார்

மூத்த அதிகாரி தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுமானால் அதனை நடத்துவதற்கும் தாங்கள் தயாராக இருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மாகாண சபைத் தேர்தலுக்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் தேர்தல் திணைக்களத்தின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆயினும், மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றால் அதனையும் நடத்த தயார் என்று அவர் தெரிவித்தார்.

சிலவேளைகளில் மாகாண சபைத் தேர்தல்களும் நாடாளுமன்றத் தேர்தல்களும் ஒரே தினத்தில் நடைபெற்றால் அதனையும் எதிர்நோக்கத் தேர்தல் திணைக்களம் தயார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான தேர்தல் அறிவிக்கப்பட்டால் தற்போது தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற அதிகாரிகளையும மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கவேண்டும் என்று தெரிவித்த அந்த அதிகாரி வாக்களிப்பு மத்திய நிலையங்களிலும் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஈ.பி.டி.பி. வெளியிலிருந்து ஆதரவு

ஊடக அறிக்கையில் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஓர் அம்சமாக இணைந்து செயற்பட ஈ.பி.டி.பி. இப்போது முன்வராது.

ஆயினும் முன்னணிக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்கும்.

-இவ்வாறு ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், கௌரவமானதும், நிரந்தரமானதுமான தீர்வை விரைவாகக் காண்பது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டுமென ஈ.பி.டி.பி. கோரியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளை ஈ.பி.டி.பி வரவேற்கிறது. அத்துடன் இம்முன்னணியுடன் தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் அது தீர்மானித்துள்ளது. (ம-8)

மா விநியோகத்தில் தாமதம்: 'பிறிமா' நிறுவனம் விளக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.4

பிறிமா நிறுவனத்தின் வவுனியா பிராந்தியக் களஞ்சியத்தில் இருந்து மா விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று கடந்த மாதம் 8ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பான விளக்கமொன்றைக் களஞ்சிய முகாமையாளர் அனுப்பி வைத்துள்ளார்.

'பிறிமா' நிறுவனத்தின் வவுனியாவில் உள்ள பிராந்தியக் களஞ்சியத்திற்கு மா கொள்வனவுக்காகச் சென்ற லொறிகள் மா ஏற்றப்படாமல் 5 நாள்கள் காத்திருந்ததாக யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் குற்றஞ்சாட்டி இருந்தது. அது தொடர்பான அறிக்கையே அன்றைய உதயனில் வெளியாகி இருந்தது.

இந்தக் குற்றச்சாட்டை வவுனியா பிராந்தியக் களஞ்சிய முகாமையாளர் முற்றாக நிராகரித்துள்ளார். இது உண்மைக்குப் புறம்பானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

மா ஏற்றுவதற்காக 01.01.2004 இல் லொறிகள் அனுப்பப்பட்டதாக சமாசம் தெரிவித்துள்ளது. ஆனால், மா ஏற்றுவதற்கான அனுமதிப் படிவம் சமாசத்தினால் தமக்கு 02.01.2004 இலேயே அனுப்பப்பட்டதாக களஞ்சிய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமாச லொறி மா ஏற்றுவதற்காக பிறிமா களஞ்சியத்துக்கு வந்தது 03-01-2004இல். யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு மா வழங்குவதற்கான அனுமதி எமது தலைமைப் பணிமனையில் இருந்து 'பக்ஸ்' மூலம் 5ஆம் திகதியே கிடைத்தது.

மா வழங்குவதற்கான புதிய நடைமுறைக்கான அனுமதி வரச் சுணங்கியதால் மா விநியோகம் 5ஆம் திகதியில் இருந்து 6ஆம் திகதி வரை தாமதிக்கப்பட்டது. 6ஆம் திகதி மா விநியோகிக்கப்பட்டது.

மேற்படி சகல தகவல்களுக்குமான ஆதாரங்களை உங்களுக்குச் சமர்ப்பித்துள்ளோம். எமது நிறுவனம் மா விநியோகிப்பதில் எதுவிதமான காலதாமதமும் இன்றி துரிதமாகப் பொறுப்புடன் செயற்படுகின்றது என்பதையும் இத்துடன் தெரிவித்துள்கொள்கின்றோம் - என்று அவர் கூறியுள்ளார்.

கண்ணாடிகள் வழங்குவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபடும் கும்பல்!

குடாநாட்டில் புதிய பாணியில் மக்களை ஏமாற்றும் கோஷ்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

கண்பரிசோதனை முகாம்களை நடத்தி மூக்குக்கண்ணாடிகளை வழங்குவதாகத் தெரிவித்து பண மோசடியில் ஈடுபடும் குழு ஒன்று குடாநாட்டில் செயற்பட்டு வருகின்றது. இந்தக் கோஷ்டி கடந்த மாதம் வரணிப் பகுதியில் இத்தகைய பண மோசடிச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதற்கு முன்னர் இதே கோஷ்டி கைதடியில் மக்களை ஏமாற்ற முயன்ற சமயம் இளைஞர்கள் சமயோசிதமாகச் செயற்பட்டு அதனைத் தடுத்துள்ளனர்.

கடந்த மாதம் 10ஆம் திகதி திடீரென வரணிப் பகுதியில் ஓட்டோக்களில் வந்த சிலர் கண்பரிசோதனை முகாம் இலவசமாக நடத்தப்படும் என்று அறிவித்தனர். சுவரொட்டிகளையும் ஒட்டினர். உள்ளூரில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றில் இந்த முகாம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சுமார் 50 பேர் வரையில் இந்த முகாமில் கலந்துகொண்டு கண்பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களில் பலருக்கு கண்ணாடிகள் வழங்குவதாகக் கூறி 400 ரூபா முற்பணமும் பெற்றுக்கொண்டுள்ளனர். கடந்த 28ஆம் திகதி அதே சனசமூக நிலையத்தில் வைத்துக் கண்ணாடிகள் வழங்கப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இன்று வரை கண்ணாடிகள் எவையும் வழங்கப்படவில்லை.

முகாம் நடத்தியவர்களால் வெளியிடப்பட்டிருந்த சுவரொட்டிகளில் பிறின்ஸ் வீதி, கொழும்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் கிளைகள் மன்னார், பதுளை, கல்முனை ஆகிய இடங்களில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், நிறுவனத்தைத் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்களோ வேறு வசதிகள் குறித்தோ அவற்றில் தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் கொடுத்த பற்றுச்சீட்டில் கொழும்பு மூக்குக் கண்ணாடி ஸ்தாபனம், இல.27, மட்டக்களப்பு வீதி, கல்முனை என்று எழுதப்பட்டுள்ளது.

ஏமாற்றப்பட்ட மக்கள் இது குறித்துக் கேட்டபோது தமக்கும் இந்த இலவச முகாமுக்கும் எந்த விதத்தொடர்பும் இல்லை என்று சனசமூக நிலையப் பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். முகாம் நடத்துவதற்கு முதல் தம்மிடம் வந்த மூவர் இத்தகைய ஒரு முகாம் நடத்த இடவசதி தேவை என்று கேட்டனர் என்றும் -

மக்களுக்குப் பயனுள்ள விடயம் என்று கருதியதால் தாம் அதற்குச் சம்மதம் தெரிவித்தனர் என்றும் - அவர்கள் கூறினர். அது தவிர முகாம் நடத்தியவர்கள் பற்றி வேறு விவரம் எதுவும் தமக்குத் தெரியாது என்றும் சனசமூக நிலைப் பொறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட கும்பலால் மோசடி செய்யப்பட்ட முழுத் தொகை எவ்வளவு என்ற விவரம் சரியாகத் தெரியவரவில்லை.

இதேவேளை -

இதேகுழுவினர் கடந்த டிசெம்பர் மாதம் கைதடிப் பகுதியிலும் இவ்வாறான ஒரு முகாமை நடத்தி பண மோசடியில் ஈடுபட முயன்றுள்ளனர். ஆனால் அப்பகுதி சனசமூக நிலைய இளைஞர்கள் உஷாராகி விசாரணை நடத்தி அவர்களிடம் இருந்து பணத்தைப் பறித்து மக்களிடம் திருப்பியும் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-170-75)

மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு வில்லன்களாகின்ற ரி.வி. மற்றும் ரியூட்டறிகள்

மூத்த எழுத்தாளர் சிற்பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

இன்றைய மாணவரின் சிந்தனை வளர்ச்சி மற்றும் அறிவு விருத்திக்கு இரு வில்லன்கள் குறுக்கே நிற்கின்றன. ஒன்று வீட்டுக்குள்ளே இருக்கும் வில்லனான தொலைக்காட்சி, அடுத்தது ரியூட்டரி இவற்றால் ஒரு மாணவன் சுயமாக அறிவை வளர்க்கும் ஆற்றலைப் பெற இயலாதவனாகிறான்.

- இவ்வாறு தெரிவித்தார் ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபருமான சிவசரவணபவன் (சிற்பி).

அண்மையில் நடைபெற்ற யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொன்விழாவில் அதன் விழா மலரை வெளியிட்டு வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் அங்கும் இங்கும் அலைந்து திரியாமல் தாம் கற்கும் கல்லூரிகளிலேயே பயன்பெறத்தக்க வகையில் பிரத்தியேக ஒம்வுநேர வகுப்புக்களை ஒழுங்கு செய்து கற்பிக்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்க பழைய மாணவர் சங்கங்கள் முன்வரவேண்டும். இதனால் மாணவர்களிடையே ஒழுக்கம் பேணப்படும். சிந்தனைத்திறனும், ஆக்கத்திறனும் உள்ளவர்கள் உருவாக வழிபிறக்கும் எனக் கூறினார்.

50 ஆண்டுகள் பத்திரிகைத் துறைக்கு தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மூத்த பத்திரிகையாளரும் கல்லூரி பழைய மாணவருமான எஸ்.எம்.கோபாலரத்தினத்தினம் விழாவில் கௌரவிக்கப்பட்டார்.

இப்பொன் விழாவில் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பேசுகையில் இக்கல்லூரி ஸ்தாபகரின் நோக்கங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படவேண்டும் எனவும் வித்தியாலய பாரம்பரியம் ஆன்மீகத்தையும் அறிவியலையும் உரவணைத்துச் செல்லும் தனித்தன்மை வாய்ந்தது எனவும் குறிப்பிட்டார். (ம)

ஒலிப்பாடல் தொகுப்பு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.4

நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகத்தின் உருவாக்கத்தில் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி, லெப்கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி ஆகியவற்றின் சிறப்பு வெளியீடான 'வரும் பகை திரும்பும்' மற்றும் இசைவாணர் கண்ணனின் இசையமைப்பில் உருவான 'ஊர் போகும் மேகங்கள்' ஆகிய ஒலிப்பாடல் தொகுப்புகளின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு நிதர்சனம் நிறுவனம் அனைவரையும் அழைத்துள்ளது. (ம-8)

யாழ்ப்பாணம் பிரதேச செயலக யாழ்.நகர்கிழக்கு சமுர்த்தி வலய அலுவலகத்தினால் 2003ஆம் ஆண்டுக்கான கருத்திட்ட உதவித்திட்டத்தின்கீழ் தொழில் முயற்சியாளர்களுக்கு அண்மையில் 25ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.

பயனாளி ஒருவருக்கு யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் விற்பனை வண்டியொன்றை வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். தொழில்நுட்ப உத்தியோகத்தர், வங்கி கட்டுப்பாட்டுச் சபை உபதலைவர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம் : கொழும்புத்துறைச் செய்தியாளர்)*

ஜனாதிபதியின் நடவடிக்கையே சமாதானத்திற்குத் தடையானது

அலிக் அலுவிகார குற்றச்சாட்டு

மாத்தளை,பெப்.4

"பிரதமரின் சமாதான முயற்சிக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகமுக்கியமாகத் தேவைப்பட்ட மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி கையேற்றுவிட்டார். இதனால், சமாதான முயற்சிகளும் தடைப்பட்டுவிட்டன. என்னதான் நடக்கப் போகிறது என்பது எவருக்கும் தெரியாத மர்மமாகவிருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்."

இவ்வாறு உள்ளூராட்சி, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்தார்.

அண்மையில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். சிவஞானத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலங்கா தொழில்பயிற்சி அதிகார சபை, ரீப் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்தால் ஆரம்பிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தை ஆரம்பித்து வைக்கும் வைபவத்தில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

நாங்கள் தேர்தலின்போது வாக்குகேட்டு மக்களை அணுகியபோது, வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவோம் என்றுதான் உறுதியளித்தோம்.

ஆனால், வெற்றியடைந்தவுடன் தொழில் வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், நாட்டின் அபிவிருத்தி ஆகிய அனைத்துக்கும் மூலகாரணமாகத் தேவைப்படுவது நாட்டில் நிரந்தர சமாதானமே என்று அதற்கே முன்னுரிமை கொடுத்து பிரதமர் செயற்பட ஆரம்பித்தார். எனவே, எங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சிக்கல் ஏற்பட்டது.

ஆனால், மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தைப் பொறுத்தவரை சமய விடயங்களை எவ்வாறு சிறப்பாக முன்னெடுத்துச் செல்கிறதோ அதேபோல் கல்வித்துறையிலும், தொழில் பயிற்சி வழங்கும் விடயத்திலும் சிறப்பாக சேவையாற்றி வருவது பாராட்டத்தக்கது.

நாட்டின் தொழில் வாய்ப்புப் பிரச்சினையை அரசால் மாத்திரமே தீர்த்து வைக்கமுடியாது. இது போன்ற சமய மறறும் பொது ஸ்தாபனங்களும் இந்த ஆலயத்தை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் பிரச்சினை தமது பிரச்சினை என்பதை உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

மத்திய மாகாணசபை உறுப்பினர் எம்சிவஞானம் இங்கு பேசும்போது:-

கல்வித் துறையில் உயர்வடையும் வாய்ப்பு மலையக இளைஞர், யுவதிகளுக்கு மிக அரிதாகவே இருக்கிறது. மலையகத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்குச் செல்வோர் எண்ணிக்கை மிகவும் குறைவு.

இந்தநிலையில், கல்வியைத் தொடரமுடியாமல் இடைநடுவில் விட்டு விட்டவர்களின் எண்ணிக்கையும், பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பினை இழந்தவர்களின் எண்ணிக்கையும் சேர்ந்து வேலைவாய்ப்பற்றோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது என்றார்.

முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவல் சபைத் தலைவர் தமாரி முத்து செட்டியார், ரீப் நிறுவனத்தின் பெருந்தோட்டத்துறைப் பொறுப்பதிகாரி ஜெயந்தி ஆனந்தகிருஷ்ணன், தொழில்பயிற்சி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பி.எஸ்.ரணசிங்க ஆகியோரும் இவ்வைபவத்தில் பேசினர்.

(ஐ-226)

தொண்டைமானாறு

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத் தைப்பூச உற்சவ தின நிகழ்வுகள்

நிகழும் சுபானு வருஷம் தை 22 ஆம் நாள் (05.02.2004) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் இடபவாகனத்தில் எம்பெருமான் வீதியுலா வருவார்.

10.02.தை 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
விசேட அபிஷேகம், அன்னதானம்

18.02.மாசி 06ஆம் திகதி புதன்கிழமை (இரவு) மாலை 6.00மணி எம்பெருமான் வீதிஉலா வருவார். (மகாசிவராத்திரி)
இரவு நாலு சாமப்பூசை நடைபெறும்.

22.02.மாசி 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
விசேட அபிஷேகம்,

25.02.மாசி 13ஆம் திகதி புதன்கிழமை
விசேட அபிஷேகம், அன்னதானம்

05.03.மாசி 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை
மாசிமகம்

17.03.பங்குனி 04ஆம் திகதி புதன்கிழமை
விசேட அபிஷேகம், அன்னதானம்

20.03.பங்குனி 07ஆம் திகதி சனிக்கிழமை
விசேட அபிஷேகம், அன்னதானம்

29.03.பங்குனி 16ஆம் திகதி திங்கட்கிழமை
விசேட அபிஷேகம், அன்னதானம்

10.04.பங்குனி 28ஆம் திகதி சனிக்கிழமை
விசேட அபிஷேகம், அன்னதானம்

13.04.சித்திரை 01ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
புதுவருடப்பிறப்பு
காலை 6மணிக்கு விசேடபொங்கல், மாலை 4மணிக்கு எம்பெருமான் வீதி உலா வருவார்.

விசேட உற்சவதினங்கள், ஆலய கைங்கரியங்கள் பற்றியும் நேர்த்தி முதலிய விடயங்களுக்கும் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

ஆலயத்தில் அன்னதானம் வழங்குதல் மிகவும் சிறப்பாக நடைபெறும். அதனால் வழமைபோல அன்னதானம் வழங்க விரும்பும் அடியார்கள் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தி சிறப்பாக அப்பணி தொடர ஒத்துழைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

இப்படிக்கு
பிரதமகுரு சிவஸ்ரீ.ச.கந்தசாமி ஐயர்
உலக குருநாத ஐயர் பிரதம குரு
ஆலய உரிமையாளர், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு
T.P.NO: 060-22135008 (28019) (32-13-18)

உ
சிவமயம்

சாவகச்சேரி வாரியப்ப சிவன்-புராதன தான்தோன்றீஸ்வரர் அருள்மிகு அமிர்தபாஷணி அம்பிகா சமேத வாரிவனேஸ்வரர் தேவஸ்தான பரிவார தேவர்கள் - நவக்கிரக பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்

சிவன் அடியார்களே!

இந்த ஆலயத்தில் பிள்ளையார், சனீஸ்வரர் முதலான பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை நடைபெறவுள்ளது.

நாளை 05.02.2004 வியாழக்கிழமை தைப்பூச நன்னாளில் காலை 7.00 மணிமுதல் 8.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்-

மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

பிரதமகுரு: "சிவாகம ஞான விசாரதா" சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஜே.ப.
ஆலய குரு : பிரம்மஸ்ரீ இ. சுரேஸ்வர சர்மா

சிவன்கோயில்,
சாவகச்சேரி. (28013)(32-13-18)

இ.கருணாகரன்,
- தர்மகர்த்தா.

அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,பெப்.4

அகில இலங்கைத் திருமுறை மன்றம், மாதாந்தம் பௌர்ணமி தினதில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பிராயணம் ஆகியன நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு திருகோணமலை, ஐந்துசந்தி ஸ்ரீபால விநாயகர் ஆலயத்தில் திருமுறை மன்ற உறுப்பினர் இ.வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.வண்ணை, குளங்கரை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்திலும் அன்றையதினம் காலை 6 மணிக்கு மேற்படி நிகழ்வுகள் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளன. (ஐ-10)

தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.காங்கேசன்துறை வீதியில் உள்ள செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயில் (கதிரேசன்கோயில்) தைப்பூச விழாவும் அன்னதான மண்டபத் திறப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

நாளை காலை 10 மணிக்கு தைபூச விழாவும் நண்பகல் 12 மணிக்கு அன்னதான மண்டபத் திறப்பு விழாவும் இடம்பெறும் அன்னதான மண்டபத்தை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைப்பார்.

இந்து கலாசார அமைச்சர் திமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீனகுருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரையையும் கம்பவாரிதி இ ஜெயராஜ் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். (ஐ-10)

★ ★ ★

யாழ்.கன்னாதிட்டி காளிகோயிலில் தைப்பூச தினமான நாளை வியாழக்கிழமை கும்பாபிஷேகதின சங்காபிசேஷமும் மணவாளக்கோல திருவிழாவும் நடைபெறவுள்ளன.

கால் நடைகளுக்கான நடமாடும் வைத்திய சேவை

யாழ்ப்பாணம்,பெப்.4

சுன்னாகம் கால்நடை வைத்திய சாலையின் நடமாடும் சேவையொன்று ஈவினை கற்பக விநாயகர் சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஆடு, மாடு, கோழி, நாய் ஆகியவற்றுக்கான நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுவதுடன் சிகிச்சை ஆலோசனைகளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(ம-8-69)

குரு பூசைதினம்

கைதடி,பெப்.4

தவத்திரு. ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் மகா குருபூசை தினம் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடி வடக்கு ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்வில் அருளுரையை சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த தவத்திரு. செல்லத்துரை சுவாமிகளும், தொடக்கவுரையை வைத்திய கலாநிதி வ.சின்னப்புவும் சிறப்புரையை முன்னாள் மாவட்ட நீதிபதி முதிருநாவுகரசு மற்றும் அ.சிவநாதன் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

இறுதியாக பாலர் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவிருக்கின்றன. (ம-75)

மணிக்கூட்டுக் கோபுர அடிக்கல் நடும் விழா

புதுத்தோட்ட விநாயகர் ஆலயம்
நெல்லியடி கிழக்கு

காலம்: 05.02.2004 வியாழன் பி.ப.2மணி

பிரதம விருந்தினர்:
மாண்புமிகு கௌரவ உயர்திரு. தி.மகேஸ்வரன்
(அமைச்சர், இந்துகலாசார அலுவல்கள்)

சறப்புவிருந்தினர்:
உயர்திரு. பொ.சிவபாதம்
(தலைவர், பனை அபிவிருத்திச்சபை)

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்வடைகின்றோம்.

(28011)(35-14-18) - ஆலயபரிபாலனசபை.

மாவட்ட ரீதியிலான போட்டிகள்

அரியாலை மக்களால் வருடந்தோறும் கொண்டாடப்படும், 85ஆவது சுதேசிய விழாவினையொட்டிய, மாவட்ட ரீதியிலான முன்னோடிப் போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகள்

1. தாச்சி 2. வலைப்பந்தாட்டம்.
3. துடுப்பாட்டம் (மென்பந்து, 7பேர், 12 ஓவர்கள்)
4. உதைபந்தாட்டம் (அரச திணைக்களக் கூட்டுத்தாபனங்கள், 7பேர்)
5. கரப்பந்தாட்டம் (Set-up)

கலைப்போட்டிகள்

1. சமூக நாடகப் போட்டி (ஒரு மணித்தியாலம்)
2. பேச்சுப்போட்டி (தமிழ் 5நிமிடம்.பொது)
3. பேச்சுப்போட்டி (ஆங்கிலம் 5நிமிடம்.பொது)

விண்ணப்ப முடிவு திகதி 07-02-04

M. விசுவநாதன்
92, கனகரத்தினம் ரோட்,
அரியாலை

விவரங்களுக்கு: செயலாளர்
அரியாலை 85 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சபை, அரியாலை.

(25022)(40-14-18-32)

பாலாவி தெற்கு
கொடிகாமம் அருள்மிகு கந்தப்புரான கந்தசுவாமி தேவஸ்தானம்
புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்

நாள் : 04.02.2004 (புதன்கிழமை)
நேரம் : காலை 7.18- 8.51 மணிவரை
பிரதிஷ்டாபிரதமகுரு: சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக்குருக்கள்
சர்வபோதகர்: சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் (J.P.)
சர்வசாதகாசிரியர் : சிவஸ்ரீ இரா. பாலகிருஷ்ணக் குருக்கள்
சிவஸ்ரீ அ.திருஞானசம்பந்தக்குருக்கள்
தேவஸ்தான பிரதமகுரு : சி.நீலகண்டக்குருக்கள்
ஆலயகுரு : வெ.ராசன் ஐயா
உதவிக்குருமார்கள் :
சிவஸ்ரீ துரை விவேகானந்தக்குருக்கள்
சிவஸ்ரீ க.கதிர்காமலிங்கக்குருக்கள்.
சிவஸ்ரீ வீரபத்திரக்குருக்கள்
சிவஸ்ரீ ஜெயக்குமார் ஐயா
சிவஸ்ரீ க.கந்தசாமிஐயர்.

(சி-33097)(32-14-18) -தேவஸ்தானம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
வளர்மதி கல்விக் கழகம்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

எமது கல்விக்கழகத்தில் கல்வி பயின்று 2003ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

		பெயர்	புள்ளி
1.	செல்வி	ரவீந்திரன் மயூரி	157
2.	செல்வன்	பற்குணநாதன் ஜெனோஜன்	154
3.	செல்வன்	சிவகுமாரன் சசிகரன்	147
4.	செல்வன்	கந்தசாமி திலக்சன்	139
5.	செல்வன்	டினோகரன் றஜீகரன்	138
6.	செல்வி	ஜெயச்சந்திரன் தாரணி	133
7.	செல்வி	நித்தியானந்தன் சோபிகா	131
8.	செல்வன்	தில்லைநடேசன் ஜெனிஸ்	128
9.	செல்வி	வைத்திலிங்கம் சுமேக்கா	126
10.	செல்வி	சிறிகாந்தன் கயிற்றா	126
11.	செல்வன்	சாந்தகுமார் மயூரன்	124
12.	செல்வி	தம்பாப்பிள்ளை பிரியந்தி	124
13.	செல்வன்	தனபாலசிங்கம் சதீசன்	123
14.	செல்வி	மகாராசா பவதாரணி	123
15.	செல்வன்	கெங்காதரன் நவிலன்	119

இவர்களுக்கு கல்வி கற்பித்த எமது கல்விக்கழக ஆசிரியர்களையும், விசேட புலமைப்பரீட்சை வகுப்புகளை எடுத்த ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களையும் சித்தியடைந்த மாணவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு மிகஅண்மிய மாணவர்களையும் மேலும் சித்தி பெற்ற மட்டுவில்பதி வாழ் மாணவர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வளர்மதி கல்விக்கழகம்,
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

(28023)(35-14-18-32)



உ
அம்மன் துணை

மெய்யடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது
அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

வருக! வருக!

இராஜகோபுர நிர்மாண ஆரம்ப விழா

நிகழும் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐந்தாம் நாள்
தைப்பூச தினம் வியாழக்கிழமை
காலை 8 மணி.

(சி-33096)(32-13-18)

Association for Rehabilitation of the Disabled (AROD)
47/2, Adiyapatham Road,
Thirunelvely North., Jaffna

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

ஆண்டுவிழா பற்றிய அறிவித்தல்

பெப்ரவரி 4 ஆம் திகதி தமிழர் தாயகப் பிரதேசங்களில் சுக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதனால் பலரது வேண்டுகோளுக்கிணங்க இன்று நடைபெறவிருந்த எமது நிறுவனத்தின் ஆண்டு விழா நிகழ்வுகள் அனைத்தும் பிற்போடப்பட்டு நாளையதினம் 05.02.2004 (வியாழக்கிழமை) எமது நிறுவனத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி ஒழுங்கு

7.30 மணிக்கு முச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி

9.00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள்

12.30 மணிக்கு பரிசளிப்பு

என்பதை அறியத்தருவதுடன் சிரமத்திற்கு மன்னித்து அனைவரையும் நாளையதினம் இடம்பெறும் விழாவில் சமுகந்தந்து சிறப்பிக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

க.கோபாலகிருஷ்ணன்
செயலாளர்,
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (C33101)(37-12-11-31)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது அலுவலகத்தைச் சேர்ந்த
சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்
திருமதி பு.பாலசுப்பிரமணியம் அவர்களின்
அன்புத் தந்தையார்

மாணிக்கம் கிருஷ்ணன்

அவர்கள் 05.01.2004இல் இயற்கையெய்தினார். இவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பி/உள்ளூராட்சித் திணைக்களம்,
செட்டித்தெரு, நல்லூர் பி/உள்ளூராட்சி ஆணையாளரும்
யாழ்ப்பாணம். (28029)(40-11-12-31) உத்தியோகத்தர்களும்.

மரண அறிவித்தல்

கந்தையா முருகேசு

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வர்த்தக வணிகர் கந்தையா முருகேசு 31.01.2004 அன்று காலமானார்.

அன்னார் ஈசுவரராணியின் அன்பு நிறைந்த கணவரும் மங்களகௌரி (கொலன்ட்), சிவகுமார் (பிரான்ஸ்), கிருஸ்ணகுமார் (சுவிஸ்), ஜெயகௌரி, சிவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசம் நிறைந்த தகப்பனாரும் தவகுலராசா (கொலன்ட்), தங்கசுதன் (இலங்கை வங்கி தலைமையகம்), கிருஸ்ணவேணி (பிரான்ஸ்), சித்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விரூபி, கிருஸ்ணரூபி, பிரணவி, கோகுலன், சினேகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனத்துக்காக பூதவுடல் திருவடி நிலை மயானத்திற்கு நண்பகல் 12 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுழிபுரம் கிழக்கு, தகவல்:
சுழிபுரம். (28047)(31-11-12) - குடும்பத்தினர்.

கலந்துரையாடல்

நல்லூர் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளதாக உதவிககல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

மிருதங்க வகுப்புகள்

புதிய பிரிவுகள் நாளை (05.02.2004) வியாழக்கிழமை தைப்பூசத்தன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன.

பாலசம்ரக்ஷ்ணா கானசபா,
சட்டநாதர் கோவில் மேற்கு வீதி.
நல்லூர்.
(28048)(37)

சமையல் ஆண்கள் ஆண், பெண்கள்

ரீமேக்கர், பரிமாறுவோர்
★ மிக்ஷர் பைக்கற் ஒட்டுவதில் அனுபவமுள்ள பெண்கள் நேரில் வரவும்.

YMCA கன்ரீன்
கச்சேரி முன்பாக

வேலைநேரம்: 6.30-5.00 (28042)(37)

பாராட்டி வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்

வாழ்க வளர்க

இலங்கையின் சுதந்திரதினமான இன்று கொழும்பு ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையிலுள்ள ஜோன் டி சில்வா மண்டபத்தில் நடைபெறும் 2003ஆம் ஆண்டுக்கான

"கலாபூஷணம்"

விருது வழங்கும் வைபவத்தில் அறிஞர்கள், அமைச்சர்கள், ஆர்வலர்கள் நடுவில் கௌரவ கலாபூஷண விருதுபெறும்.

திருமறைக்கலாமன்ற நிர்வாக
அலுவலர் கலாபூஷணம்
கிறகரி பிலிப் பேர்மினஸ்
அவர்களை

இறையருள் பெற்று சீரும் சிறப்புடன் இனிவரும் காலங்களும் இனிதாய் அமைந்து பல்லாண்டுகாலம் வாழ வேண்டுமென மனமார வாழ்த்தி மகிழ்வடைகின்றோம்.

குருநகர் S.யோகராசா (அத்தார்)
(28039)(31) குடும்பத்தினர்.

ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

05.01.2004 அன்று சிவபதமடைந்த எமது சங்கச் செயலாளர்
திரு.கி. செல்வராசா அவர்களின் தந்தையார்-
அமரர் மாணிக்கம் கிருஷ்ணன் (கிட்டுணு)
அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை,
(மங்கையர்கரசி வித்தியாசாலை),
நல்லூர். (28025)(40-12-11-17-31) - பழைய மாணவர் சங்கம்.

மரண அறிவித்தல்கள்

மிக்கேல்பிள்ளை அடைக்கலசாமி (மாதகல்)

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட மிக்கேல்பிள்ளை அடைக்கலசாமி 2004.02.02 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இருதயநாயகியின் (இராசபுஸ்பம்) அன்புக் கணவரும் அன்ரனி ஜெயரட்ணம், கிளமென்ற அஞ்சலா (ஜெயா), ஜெயமறிஸ்ரெலா (ஜெயக்குமாரி), அல்பொன்ஷா ஜெயவதனி (மருத்துவ மாது, வவுனிக்குளம்), ஆன்சிறில் றூபினா, யூட்ஸ் அன்ரனியா வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரான்சிஸ் மனோகரன் (எழுவைதீவு), பியபாலா, யோன் பிரகாஸ் (ஆசிரியர், அம்பாள்புரம்), அமலோற்பவ பரிபூரணம், திருமலர் ஆகியோரின் மாமனாரும், மதி, பிரதீபன், அமல்ராஜ், நிஷான், ரொஷான், றொண்ஷன், றொஷானி, டொறிஸ் (ஆசிரியர், புனித தோமையார் முன்பள்ளி), றோஸ், பியற்றிஸ், நிஜந்தன், ஜெயந்தன், காலஞ்சென்ற றஜீந்தினி, றஜீவன், றோஜிதன், ஜெறூபன், ஜெனுஷன், ஜனுஷன் ஆகியோரின் பேரனும் இ.ம.ஜெயசீலன் (மறை ஆசிரியர்- யாழ். மறை மாவட்டம்) அவர்களின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (5.2.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின் பின்னர் மாதகல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல். தகவல்:
(28008)(40-11-12-17-31) அ.அ.ஜெயரட்ணம்
(மகன் -மாதகல்)

கார்த்திகேசு விநாசித்தம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்)

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு விநாசித்தம்பி அவர்கள் நேற்றுமுன்தினம் (02.02.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா தம்பதிகளின் அன்பு மருமகனும் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சடாட்சரம் (சுவிஸ்), றஜனி (வசந்தி-சுவிஸ்), பஞ்சாட்சரம் (டோகா), பாமினி (சுவிஸ்), புஷ்பநாதன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான நந்தகுமார், கேசவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மொனிக்கா, பாலசுந்தரம், பவானி, இராசதுரை ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிந்துசிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி ஒழுங்கை, (28021)(31-1211) தகவல்:
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. வி.சோதிப்பிள்ளை (மனைவி).

Dr. கதிர்காமு இரத்தினசபாபதி

புலோலி தெற்கைச் சேர்ந்த Dr. கதிர்காமு இரத்தினசபாபதி அவர்கள் நேற்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - மூத்தநாச்சிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும் சாந்தாவின் அன்புக் கணவரும் சோபனா, சியாமளா, தாரணி ஆகியோரின் தகப்பனாரும் இரவிச்சந்திரன், சுதாகரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி. தகவல்:
(சி-33098)(31-11-12) க.செல்வவிநாயகம் (சகோதரன்).

திருமதி கனகசுந்தரம் இராசம்மா (தையலம்மா)

(இளைப்பாறிய ஆசிரியை, காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை - நடுத்தெரு, காரைநகர்)

இளைப்பாறிய ஆசிரியை திருமதி கனகசுந்தரம் இராசம்மா நேற்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை காரைநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் கனகசுந்தரத்தின் அன்பு மனைவியும் விஜயலட்சுமி, சிவகுமாரன் (கனடா), சிவநேயன் (சுவிஸ்), செந்தாமரைச் செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை (அதிபர், Dr.தியாகராஜா ம.ம.வித்தியாலயம்), ஸ்ரீ ரஞ்சனா (கனடா), கமலநாயகி (சுவிஸ்), பாலகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜயபாரதி, மாலினி, பிருந்தா, சிவகணேசன், பார்த்திபன், ஆதிபன், கோபி, இளங்கோ, ஜொனதன், கிருஷ்ணப்பிரியா, காயத்திரி, சஷ்டிக்குமரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் நடுத்தெருவிலுள்ள இல்லத்தில் நாளை (05.02.2004) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு, காரைநகர். (28026)(31-11-12) தகவல்:
- குடும்பத்தினர்.

திருமதி பாக்கியநாதன் அருந்ததி அம்மாள்

தெல்லிப்பழை விராங்கொடையைச் சேர்ந்த திருமதி பாக்கியநாதன் அருந்ததி அம்மாள் நேற்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - மாணிக்கமுத்து தம்பதியினின் அன்பு மகளும் பாக்கியநாதனின் அன்பு மனைவியும் இரத்தினராசாவின் (கனடா), சகோதரியும் செல்வச்சந்திரன் (பிரான்ஸ்), கோமதி (கனடா), கல்யாணி (கொக்குவில்), செல்வி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயதேவி (பிரான்ஸ்), ஜோதிராஜா (கனடா), மகேந்திரராஜா (இந்தியா), வாகீசன் (இந்தியா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2004) புதன்கிழமை சுதுமலை மத்தி மானிப்பாயிலுள்ள அசோக்குமார் (வெல்கம்) வீட்டில் நடைபெற்று, பூதவுடல் காலை 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மத்தி, தகவல்:
மானிப்பாய். (28028)(31-11-12) இ.அசோக்குமார் (வெல்கம்).

Jayoda ஜயோதா Jayoda

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல 6032504 முதல் 6040013 வரை
சீட்டிழுப்பு இல.003 திகதி 02-02-2004

வெற்றி எண்கள் 4 6 0 6 1 5 சுப்பர் எண் 23

சுப்பர் ஜக்பொட் பரிசு 11,221,925/- வெல்லப்படவில்லை

வெற்றி எண்கள் பெற்றோர்	வெற்றி தொகை	பரிசுத்	முழு பரிசுத் தொகை
6 எண்களுடன் சுப்பர் எண்	-	11,221,825/-	-
இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள்	01	1,000,000/-	1,000,000/-
இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள்	15	50,000/-	750,000/-
இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள்	139	5000/-	695,000/-
இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள்	1,398	500/-	699,000/-
இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள்	13,959	100/-	1,395,900/-
இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண்	139,590	10/-	1,395,900/-

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.5,334,800/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட் ரூ.11,603,625/-

தொடர் இல. 7016468க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 பெப்ரவரி 05ம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாலனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
6033283-8-53
6035865-2-24
6035232-4-34
6038227-2-89
6039474-3-16

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசெகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

பாதுகாப்பு அமைச்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாதுகாப்பு அமைச்சை பிரதமரிடம் ஒப்படைப்பது அரசமைப்புக்கு முரணாக அமையும் என்பதால் சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய விடயங்களில் இணைந்து நடைமுறைப் படுத்துவதற்காக பிரதமருக்கு ஜனாதிபதி ஐந்து யோசனைகளை முன்வைத்துள்ளார்.

ஆனால் மனோ - மலிக் குழுப் பேச்சுக்களில் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகள் அனைத்தையும் பிரதமர் தொடர்ந்து நிராகரித்து வருகிறார். இராணுவம், விமானப்படை, கடற்படையின் அதிகாரங்களையே அவர் கோரி நிற்கின்றார்.

தேசிய நல்லிணக்கக் கூட்டு முன்னணி அரசு ஒன்றை ஏற்படுத்தும் யோசனையைப் பிரதமர் நிராகரித்தார். இதனாலேயே பொது இணக்கப்பாட்டுக்கான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி, அதிகாரிகள் மட்டத்திலான குழுவொன்றை உருவாக்கினர்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தை ஸ்ரீ தர்மகீர்த்தி யாராம விகாரை, கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில், புதிய சோனகத் தெரு பெரிய பள்ளி வாசல், தலங்கம புனித பாத்திமா மாதா ஆலயம் ஆகியவற்றில் நடைபெறும்.

இக்கொண்டாட்டங்களை முன்னிட்டு இன்று காலை 7 மணி முதல் சுதந்திர சதுக்கப் பிரதேசம், ஜனாதிபதி மாளிகைப் பிரதேசம், கொள்ளுப்பிட்டிப் பிரதேசம் ஆகியவற்றிலுள்ள பல வீதிகள் வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும்.

இன்று கொழும்பில் விசேட பாதுகாப்பு

சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று கொழும்பில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட மேலதிக பொலீஸார் வரவளைக்கப்பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கான பொலீஸார் முக்கிய இடங்களில் காவற் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மணல் ஏற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்த வீதி ஒன்றில் சைக்கிளில் வந்த சிறுவன் மீது மோதியது என்றும் -

'டிராக்டர்' மோதியதில் தூக்கி வீசப்பட்ட சிறுவன் தலையில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்றும் - கூறப்பட்டது.

இந்தச்சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நேற்றுப்பிற்பகல் யாழ்நீதிவான இ.த.விக்னராஜா நேரில் சென்று விசாரணை மேற்கொண்டார். விபத்தை யடுத்து தப்பிச்சென்ற 'டிராக்டரை' இனம்கண்டு, அதன் சாரதியைக் கைது செய்யுமாறு அவர் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். அத்துடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சிறுவனின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் நீதிவான் பணிப்புரை விடுத்தார். (ஒ-10-7-15-139)

கிருஷாந்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றின் மூன்று நீதிபதிகள் அடங்கிய 'ட்ரயல் அட்பார்' மரண தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1996 ஆம் ஆண்டு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரைத் தேடிச்சென்ற போது இவரது தாயார், சகோதரர் மற்றும் அயலவர் ஒருவர் ஆகியோரும் கொலைசெய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று துக்க.,.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை மேற்கொள்ள ஒலி பெருக்கிக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

தென்மராட்சி தெற்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களும் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி தென்மராட்சி பிரதேசச் செயலகம் முன்பாக இன்று காலை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றனர்.

மறியல்போர்

ஏ-9 தரைவழிப்பாதையில் இன்று மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது. வவுனியா வடக்கில் புளியங்குளத்துக்கும், ஓமந்தைக்கும் இடையே இந்த மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-31-51-70-86-150-173)

அத்தியாவசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து 40 ரூபாவாகக் குறைவடையும்.

பெரியவெங்காயத்தின் விலை 38 ரூபாவாக வீழ்ச்சியடையும், 55 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு இனி 39 ரூபாவாக வீழ்ச்சியடையும்.

இதேவேளை, கோதுமைமாவுக்கு விதிக்கப்பட்டிருந்த மூன்று சதவீத சுங்கத்தீர்வை முற்றாக ரத்துச்செய்யப்படுவதுடன். சிறுவர்களுக்கான பால்மா இறக்குமதி வரி 6 சதவிதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணங்களை வழங்குவதற்கு அரசுக்கு 45 கோடி ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது.

-' இப்படி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிலும், போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என்றும் - ஆயினும் இரு தினங்களுக்கு மேல் தொடர்ச்சியாக விடுமுறைகள் வரும் போது வர்த்தக நிலையங்களை திறக்கும் தினங்கள் குறித்து வணிகர் கழகம் அவ்வப் போது தீர்மானித்து அறிவித்தல்விடுக்கும் என்றும் - வணிகர் கழகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை தினங்களில பணியாற்றும் ஊழியர்களின் நலன்கள் பேணப்பட வேண்டும் எனறும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

(ஒ-10)

மரண அறிவித்தல்கள்

வேலுப்பிள்ளை இரத்தினசோதி

கோவளம், காரைநகரைப் பிறப்பிடமாகவும் கருகஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இரத்தினசோதி அவர்கள் நேற்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாவலப்பிட்டி வர்த்தகர் வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் இளைய புதல்வரும் திலகவதியின் அன்புக் கணவரும் நிறைஞ்சனா, முகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2004) வியாழக் கிழமை நாவலப்பிட்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.355 கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (28050)(36-11-16)

தகவல்
எஸ். வி. அருட்சோதி (சகோதரர்)

திருமதி கந்தையா செல்லம்மா

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லம்மா அவர்கள் நேற்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை பொன்னையா (ஓய்வு பெற்ற தெ.ப.நோ.கூ.ச.ஊழியர்) - இராசம்மாவின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை, சிவகுரு ஆகியோரின் மருமகளும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற தெ.கி.ப.நோ.கூ.ச.ஊழியர்), காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, பரமேஸ்வரி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தம்பிராசா(இலங்கை மின்சார சபை ஊழியர், சாவகச்சேரி), திருஞானம் (சுவிஸ்), சுகிர்ந்தன், உஷா(கனடா), பிரபா(கனடா), பிரியதர்சினி(கனடா), சுகேசன்(நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபிகா (யாழ்.பல்கலைக்கழக மாணவி), தர்சிகா(திருநாவுக்கரசு மகாவித்தியாலய உள்ளகப் பயிற்சி ஆசிரியர்), நிவேதிகா(நிதித்துறை, சாவகச்சேரி), குகன்(நோர்வே), சேந்தன், லோசிகா, (சா.இ.க. மாணவி), உமாபாலினி(சுவிஸ்), ஏகலைவன்(சுவிஸ்), ரவிசசந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2004) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்துவில் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு,
மந்துவில். (28049)(36-11-16)

தகவல்
தம்பிராசா (மருமகன்).

மாணிக்கம் நடராசா

(உரிமையாளர், நடராசா அன்கோ- திருநெல்வேலி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் மாணிக்கம் நடராசா (உரிமையாளர், நடராசா அன்கோ- திருநெல்வேலி) அவர்கள் நேற்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்- தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் பரமேஸ்வரி மற்றும் சர்வானந்ததேவி, செல்வரத்தினம், பாக்கியநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் பாஸ்கரன் (சுவிஸ்), ரஜனி (லண்டன்), பிரபாகரன், நிஷாகரன், காலஞ்சென்ற ஐங்கரன் மற்றும சசிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற இராசையா மற்றும் நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சுதாகரன், யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்ஷன், விதுஷன், மதுஷன், விதினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/1, கந்தபுராண வீதி,
கந்தர்மடம் (28038)(36-11-16)

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

திருமதி விசாலாட்சி(மகேஸ்வரி) சரவணபவன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய், கல்வளையை வசிப்பிடமாகவும் கொண்ட விசாலாட்சி(மகேஸ்வரி) சரவணபவன் அவர்கள் நேற்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் சரவணபவனின்(ஓய்வு பெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வீரகத்தி - முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ் சென்ற சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகளும் மலர்விழி(ஆங்கில ஆசிரியர், ஸ்ரீ கணேச மகளிர் வித்தியாலயம், திருகோணமலை), மங்கை (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகேஸ்வரன் (தம்பலகாமம் உதவிப்பிரதேச செயலர்), காலஞ்சென்ற சுரேஷ் ஆகியோரின் மாமியாரும் நாகமுத்து (ஓய்வுபெற்ற எழுதுநர்) , காலஞ்சென்ற சண்முகலிங்கம், இராஜேஸ்வரி, அருளானந்த சிவம் (இத்தாலி), குமரகுருபரன (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாக்கியம், ஈஸ்வரி, ஜெயமணி (இத்தாலி), ஜெம்மா(இத்தாலி), சண்முகரட்ணம், கமலாம்பிகை, பெரியமணி, சின்னமணி, செல்லக்கிளி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(05.02.2004) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளைப் பிள்ளையார்
தெற்கு வீதி,
சண்டிலிப்பாய். (28046)(36-11-16)

தகவல்:
- குடும்பத்தினர்.

அரியாலையில் ஓர் அதிசயம்!

நாளை 05.02.2004 தைப்பூச நன்னாளில்

விநாயகா கோழித்தீவனம்

உதயமாகிறது

கோழி வளர்ப்புக்கான அனைத்து மாஸ் வகைகளுக்கும்
நீங்கள் அணுகவேண்டிய இடம்:
இல.15, அருளம்பலம் ஒழுங்கை,
அரியாலை.

☞ தபாற்கட்டைச் சந்தியிலிருந்து 250 M உள்ளே. (27975)(36-12-16)

INVITATION

The Director, Course Director and Staff of the IIS
cordially invit our patrons. well wishers. friends.
parents and students.
to the
8th Institute Day
celebration at the Jubilee hall St.Johns college. Jaffna on
Thursday 5th February 2003 at 9.00 a.m. Quests of Honour
Mr. David Dominic
(Executive Director, INFOTEL Lanka Society Ltd.)
&
Mr. Prashantha Fernando
(Country Manager, Edexcel International,
Sri Lanka & Maldives)

Institute Of Informatics Studies
100, Clock Tower Road, Jaffna.

(C-33014) (12-16-36)

11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23
06
1925

ஆண்டவன் அடியில்
05
02
1993

அமரர் வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர் (மாயவர்)

ஐயா!

அவனியை நீர் பிரிந்து
ஆண்டுகள் பதினொன்று மறைந்தோடி விட்டதனை
இந்நாளில் நாம் நினைவு கூருகிறோம்.

காளிகோவிலடி,
மல்லாகம்.
(சி-33100)(36-12-16)

என்றும் உங்கள் நினைவோடு வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

GROUP CLASS

67/5, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(சக்தி கொமினிகேசன் அருகில்)

தரம் 10, O/L
கணிதம்:-V.N. பத்மநாதன்
வணிகக்கல்வி: R.S.Chanaa
ஆரம்பம்:-05.02.2004
காலை 10 மணி

குறிப்பு:- I) மாணவர்களின் வசதிக்கு ஏற்ப நேரம் தீர்மானிக்கப்படும்
II) விரும்பிய பாடம் எடுக்கலாம்
III) வாரத்தில் 6 மணித்தியால வகுப்புக்களும் மாதாந்தப் பரீட்சையும் நடத்தப்படும்.
(280043)(36-12-16)

New Stocks Available

மிகக் குறைந்த பணத்துடன் மிகப் பெறுமதியானதை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்

Pentium I, II, III
IBM, Compaq, Dell
ரூ12,000/- லிருந்து
இலவச பராமரிப்பு சேவையுடன்

STP Your Partner in IT Solution
73, Pulaly Road, Kanthamadam, Jaffna
T.P:021 222 26"4 email stpworld@sltnet.lk

SUBRA

சித்தன் கேணி
(Gove -Reg)

பேச்சு ஆங்கிலம்

By:BRITTO

புதிய பிரிவு 06.02.2004
மாலை 4.00

(சி-33032)(36)

Lingam master - swiss

சுவிஸ் வாழ் தமிழர்களின்
முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss. (26642)(36-12)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.